பதிவு எண் 2041 | மகாத்மா காந்தி வாழ்க. | தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | | |
|---|---|---|
| வருட சந் … முன் பண … ரூ 3—0<br>6 மாத ச … ,, ரூ 1–12<br>வெளி ந … கு ,, ரூ 4—0 | [வாரப்பதிப்பு] | வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12<br>கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.<br>☞ தனி விகிதமும் உண்டு. |

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | | |
|---|---|---|
| மாலை 2 | அக்ஷய-ஞூ மாசி-மீ 9-உ (20—2—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 43. |

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான் சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகாமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

## குடி அரசும் நாயக்கரும்.

### வினா—விடை.

(அய்யாமுத்து.)

வினா—என்னப்பா உங்க நாயக்கர் திடீரென்று மாறிவிட்டார். ஒத்துழையாமை ஒத்துழையாமை என்று காங்கிரசிலிருந்தார்; இப்போது என்னென்னவோ பேசுகிறார்.

விடை:—இல்லையே! இப்பவும் ஒத்துழையாமைதான் பேசி வருகிறார்.

வினா:—நீ சொல்லுவது தப்பு.

விடை:—இல்லை ஐயனே! நாயக்கர் ஒத்துழையாமையைத்தான் தேடுகிறார். ஆனால் அது அவர் எவ்வளவு தீவிரமாகத் தேடுகிறாரோ அவ்வளவு தீவிரமாக மறைகிறது. ஒத்துழையாமை முயற்கொம்பாகி விட்டது. உள்ள நிலைமையில் சாத்யமெதுவோ அதைப்பற்றித்தான் நாயக்கர் பேசுவது.

வினா:—என்ன சதா பிராமணர்களை திட்டியவண்ணமா யிருப்பதுதானா சாத்யமானது?

விடை:—உள்ளதை யுள்ளவாறு பேசுவது திட்டுவதாகாது. தாங்கள் அயோக்கியத்தனம் செய்தால் தாங்கள் செய்வது யோக்கியமற்றது என்று சொல்லுவது திட்டுவதாகுமா? தாங்கள் செய்யும் தவறுதலைத் தாங்கள் உணர்ந்து நல்வழி செல்லுவதற்கு அநுகூலம் செய்வதாகவல்லவா ஆகும்.

வினா:—என்ன சதா பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்காரர்கள், மோசக்காரர்கள், செய்வதெல்லாம் அயோக்கியத்தனம் அப்படி இப்படி என்று வசை பாடுவதால் எப்படி நல்வழி செலுத்தமுடியும்?

விடை:—தாங்கள் வெறும் தலையங்க வார்த்தைகளையே சொல்லுகிறீர்கள். தாங்கள் சொல்லிய அங்கங்களில் என்ன விஷயங்கள் எழுதப்பட்டிருக்கிறதென்று தாங்கள் படித்திருப்பீர்களானால் இப்படிச் சொல்ல வழியிராது.

வினா:—என்ன விருந்தாலும் நாயக்கர் போவது ரொம்ப எக்ஸ்ட்ரீம் (Extreme) ஒத்துழையாமை கேட்கிறவருக்கு வகுப்புவாரிக் கொள்கை என்னத்திற்கோ?

விடை:-ஐயா, பண்டுதொட்டு எட்டுக்கும் எழுத்துக்கும் பார்ப்பனர்களே உரியவர்களாக இருந்து வருவதைத் தாங்கள் அறியீர்களா? எட்டெழுத்து உரிமையால் எங்கு பார்த்தாலும் பார்ப்பன உபாத்தியாயர்கள் பார்ப்பன மாணவர்கள், பார்ப்பன உத்தியோகஸ்தர்களாக இருப்பதும் தாங்கள் பாராததா? இந்நிலைமையால் பள்ளியில் படிக்கும் மாணவனுக்கே மனச்சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. பிராமணனாயிருந்தால் தான் நல்ல படிப்பு; நல்ல உத்தியோகம், நல்ல வாழ்க்கை எல்லாம் கிடைக்கும் என்ற எண்ணம் நமது மாணவரின் உற்சாகத்தைக் கெடுத்து, மெட்ரிகுலேஷன் எட்டாமலே எத்தனைபேர் பள்ளியை விட்டு ஓடிவிடுகிறார்கள் தெரியாதா!

வினா:—இதற்கும் வகுப்புவாரிக் கொள்கைக்கும் என்ன சம்பந்தம்.

விடை:—அதைத்தான் சொல்லுகிறேன். பள்ளி தொட்டு, மன்றம் வரை வகுப்புவாரிக்கொள்கை ஏற்பட்டால் தான் நமதுபிள்ளைகள் படித்து நல்ல பதவி பெறமுடியும். இல்லையேல் முடியாது.

வினா:—பள்ளியிலும், உத்தியோகத்திலும் பிராமண ஜனத்தொகைக் கேற்றவாறு இடம் ஒதுக்கி விட்டால் பிராமணர் பிழைப்பதெப்படி? அநியாய மல்லவா? அவர்கள் பிழைப்பைக்கெடுக்கலாமா?

விடை:—உத்தியோகம் செய்தே பிழைக்கவேண்டுமென்பது பிராமண வேதசம்பிரதாய மல்லவே. அப்டியிருக்க எல்லா உத்தியோகங்களையும் ஏகபோகமாய் அவர்களே தான் அனுபவித்து வாழ வேண்டுமென்று தாங்கள் சொல்லுவதெப்படி? எல்லாவகுப்பாருக்கும் நாம் இடம்கொடுக்கத்தான் வேண்டும்.

வினா:—நல்ல நியாயம் பிராமணர்களை உத்தியோகத்திலும் விடக்கூடாது. அவர்கள் பஞ்சாங்கமும் ஆகாது. புரோகிதமும் ஆகாது. அவர்கள் செத்துமடிவதா, என்ன?

விடை:—இல்லை ஐயனே! அப்படியல்ல நீங்கள் குடித்தனத்தையே நம்பி வாழுகிறீர்கள். குடித்தனமற்றவர்கள் வியாபாரத்தையோ, உத்தியோகத்தையோ, நம்பித்தான் வாழவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு அவகாசம் நாம் கொடுக்கத்தான் வேண்டும். குடித்தனம், துரைத்தனம், பதவி, பட்டம், வியாபாரம், பந்து, லாபம், எல்லாவற்றிற்கும் ஒரே நபர் ஆசை கொள்வதெப்படி? இப்பேராசை நாசம் செய்யும். உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

பார்ப்பன வக்கீல்களில் பெரும்பாலோர் நல்ல பூஸ்திதி சம்பாதித்துவிட்டனர். இருப்பினும், மேலும் மேலும் ஆசைகொண்டு வக்கீல் தொழிலை விடாமல் பிடித்துவருகின்றனர். இவர்கள் கள்ளுக்கு மரம் கொடுத்து வருவதையும் [illegible] பாங்குலேவாதேவிகளுக்கும் குறைவில்லை. கம்பெனி பங்குகள் இலாபங்கள் எல்லாம் உண்டு. வியாபாரங்கள், தோல் கிடங்குகள் எல்லாமுண்டு. மந்திரிவேலைக்கும் ஆசை. ஏன் இவர்கள் ஒன்றைமட்டும் நம்பிப்பிழைக்கட்டுமே? தங்கள் பிள்ளைகளை வெவ்வேறு துறையில் அமர்த்தட்டுமே? பூமியுடையவர்கள் உழகட்டுமே? அவர்கள் வக்கீல் பிடங்கள் காலியானால் மற்றவர்களுக்காவது பிழைப்புண்டாகுமல்லவா?

வினா:— தம்பி, நானொன்று கேட்டால் நீயொன்று சொல்லுகிறாய். வகுப்புவாரிக் கொள்கையால் வகுப்புதுவேஷம் ஏற்படாதா?

விடை:— வகுப்புவாரிக் கொள்கையின்மையால்தான் வகுப்புதுவேஷங்கள் கிளம்புகின்றன. உதாரணமாக உங்கள் சொந்த விஷயங்களையே எடுத்துக்கொள்ளுங்கள். தங்கள் பிள்ளைகள் நாலவருக்கும், அவரவருக்கு வேண்டியதைத் தாங்கள் ஒதுக்கிவைக்காவிட்டால் [illegible] அதிகமாகக்கொடுத்துக் [illegible]? அப்போது தானே அவர்களுக்குள் துவேஷம் கிளம்பும், தாங்களே பிரித்துக்கொடுத்துவிட்டால் அவனவனுக்குக்கிடைத்த நியாயமான பங்கைக் கொண்டு சாந்தமடைவார்களல்லவா? அந்நிலைமை! அதுபோலவேதான் நமது ராஜிய வாழ்விலும் பார்ப்பனர் தந்திரபலசாலிகள் உள்ளதையெல்லாம் சுரண்டிவிட்டார்கள். இல்லாததற்கு நாம் அடித்துக்கொள்ளுகிறோம். 'முந்து, பிந்து' என்ற கூச்சல் பார்ப்பனர் தொகைக்கு ஏற்றவாறு இடங்கள் பிரிக்கப் பட்டுவிட்டால் நாமடித்துக்கொள்ள நியாயமில்லை. அவரவர் பங்கை அவரவர் தாராளமாக அநுபவிக்க முடியும் எல்லோரும் முன்னேறமுடியும். எல்லோரும் சமபலமடைந்துவிட்டால் வகுப்புவாரிக் கொள்கை தானே மறைந்துவிடும். முகமதியர்களையும், கிருஸ்துவர்களையும் கவர்ன்மெண்டார் பிரத்தியேகப்படுத்திவிட்டதால் நாமும் அவர்களும் [illegible]த்துக் கொள்ளுவதில்லையே, அவர்களைப்போலவே பார்ப்பனர்களைபிரத்தியேகப் படுத்த வேண்டுமென்பதுதான் நாயக்கரின் வகுப்புவாரிக்கொள்கை. அவருடைய கொள்கை ஸ்தாபி[illegible]னால்தான் நாட்டில் சமாதானமும், [illegible]மையும், சுயமரியாதையும் ஏற்படும்.

வினா:—[illegible]ர்கள் புத்தி[illegible]லிகள்— திறமையா[illegible] அவர்களுடைய [illegible] வேண்டும். [illegible]ந்தில் நாம அவர்களை ஓட்டிவி[illegible] [illegible]யராஜ்யம் கிடைத்த பிறகு [illegible], வகுப்புவாரி ஏற்படுத்தி[illegible]லாம். அதுவரையிலும் உங்கள் நாயக்கரை இதை மறந்து விடச் சொல்லுவாயா?

(தொடரும்)

## காஞ்சிபுரம் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்

5—2—27-ல் முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீமான் டி. பரமசிவ முதலியார் அவைத்தலைமையில் இவ்வூரில் "பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது. ஏராளமான மாணவர்களும் உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும் வந்திருந்தனர். ஸ்ரீமான்கள் டி. பரமசிவ முதலியார் தலைவராகவும் மு. பொன்னுசாமி முதலியார், ம. முருகேச முதலியார் உபதலைவர்களாகவும், பி. செ. மாணிக்கவாசக முதலியார் காரியதரிசியாகவும், அ. பாலகிருஷ்ண முதலியார், என். சி. குப்புசாமி முதலியார் உதவி காரியதரிசிகளாகவும், ஏ. ஷண்முக முதலியார் பொக்கிஷதாரராகவும், வே. இராமசாமி முதலியார், ஏ. கே. [illegible]ங்கவேலு முதலியார், எம். வி. முருகேச முதலியார், கீ. நரசிம்ம முதலியார், தீ. அப்பாய் செட்டியார், சுந்தரஞ் செட்டியார், ராஜபாதர் முதலியார்; தா. செ. கந்தசாமி முதலியார், கோபாலகிருஷ்ண செட்டியார், அ. கெங்காதர முதலியார், எஸ். மாணிக்க முதலியார், குமரன் பிரஸ் சொந்தக்காரர் குப்புசாமி முதலியார், நிர்வாக உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனரென காரியதரிசி அறிவிக்கிறார்.

# மதம்வேறு குருக்கள் கட்டுப்பாடு வேறு தர்மம் வேறு.

(கைவல்லிய சாமியார் எழுதுவது)

இளமையிலேயே கிழவனாகி குருட்டு நம்பிக்கை என்ற மூடமதிச்சுமையால் முதுகு வளைந்து தன்னைத்தான் நம்பாத கோழையாயிருக்கும் நமக்குள் சில்லரைச்சண்டைகளும் அற்பப்பகைகளும் வீண் பொறாமைகளும் ஏற்பட இது காலமல்ல. கஞ்சிக்குப் பிச்சைக்காரர் சண்டையிடுவதுபோல சிறு தயவுகளை விரும்பி நமக்குள் சண்டை போடுங்காலம் சென்றுவிட்டது. இருட்டு மூலைக்குள் உட்கார்ந்துகொண்டு நம்மை நாமே மதித்துக்கொண்டு வெறும் பாவனை செய்வதில் பயனில்லை. உலகத்தார்களின் சபைகளில்நம்முடைய கர்வம் சிறுமைப்படுகிறது. நாம் பல நூற்றாண்டுகளாய்ச்செய்த பாவம் பெரும் சுமையாகி இப்போது நமதாண்மையை நசுக்கி நமதறிவையும் கெடுத்துவிட்டது. நாம் முன்னேறமுனைந்தாலும் இந்த சுமை நம்மை பின்னே இழுக்கிறது. பழங்காலப்புழுதியும் சருகும் புதிய உதயத்தை மறைக்கின்றன. நம்முடைய இறமை தொழிலை அவை மூடுபனிபோல் மறைக்கின்றன. குருட்டு நம்பிக்கையான மூடமதிச்சுமையை கூசாமல் எறியாவிட்டால் உலகமெல்லாம் சிரிக்கும் அவமானத்திலிருந்து தப்பமுடியாது. சிறப்படைந்த மனித ஜாதியுடன் நாமும் சமமாக நடந்து செல்லவிரும்பினால் இந்த அவிவேகமுதுகுச்சுமையை கூச்சப்படாமல் வீசி எறிந்து விடவேண்டும். புறத்திலிருந்து இடைவிடாமல் அவமானமும் கஷ்டமும் நம்மீது பட்டுப்பட்டுத் திண்டலாயிருப்பதைத் நாமாக சுயமரியாதை என்னும் அக்கினியால் சுத்தி பண்ணிக்கொள்ளவேண்டும். அந்த அக்கினியில் நம்பாவங்களெல்லாம், வெந்துபோம். அஞ்ஞானப்புகை விலகும் சோமபற்றுணம் சாம்பலாகும்.

முதலாவதாக நம் ஜனங்களின் தரித்திரத்தைத்துலக்க வழிதேடுங்கள் அவர்களுக்கு உங்களது தருமத்தைச்செய்யுங்கள் ஆடையையும் பருத்தியும் வாங்கிக்கொடுத்து ஏழைகளை நூற்கச்சொல்லுங்கள் அதையே நீங்களும் உங்கள் பந்து சிநேகிதர்களையும் கட்டச்செய்யுங்கள், அந்தக்கூலிகளை அடைந்து அவர்கள் தங்களது பட்டினியை ஒழிக்கட்டும். மதப்பெயரால்சாமிக்கும்குருக்களுக்கும் சிலபார்ப்பாருக்கும் சிறிது செலவுசெய்துவிட்டதாலேயே நீங்கள் செய்யவேண்டிய தர்மமெல்லாம் செய்துவிட்டதாக நினைத்திருப்பது பெரியமதியீனம்.

## மதம் வேறு தர்மம் வேறு.

மதம் வேறு தர்மம் வேறு. மதமென்பது மனிதனுடைய மனம் பூரணப்படாமல் இன்னொன்றை யாசிக்கிற சுபாவத்திற்கு ஏற்பட்ட பரிகாரம். தர்மமென்பது மனிதனுடைய கடமை. அதைச்செய்யாதவன மனிதனாகான். தர்மமான கடமையைச் செய்தவர்களின் கூட்டங்களும், தேசங்களும் மேன்மையடைந்திருக்கின்றன. தர்மமான கடமையைச்செய்வது கஷ்டமென்பதாகவோ ஒருசமயம் அநேக நாள் செல்லவேண்டியதென்பதாகவோ பயந்து லேசுவாக மோட்சமோ காரியசித்தியோ பார்ப்பனர்களுக்கு பணம் கொடுத்து சம்பாதித்துவிடலாம் என்று நினைத்து அவனைக் கேட்டு அவன் சொல்லுகிறபடி "அபிஷேகம் அர்ச்சனை நவக்கிரக ஜெபம் கணபதி ஓமம் சாந்தி மந்திரம் இருபத்தேழு பார்ப்பானுக்கு சாப்பாடு தெட்சணை" முதலியவைகள் என்கிற காரியங்களில் ஆசை பிறந்து இவைகளையே எதற்கும் சொல்லி இப்படியே செய்து வந்த பழக்கத்தால் தர்மமான கடமைகளெல்லாம் கெட்டு தேசங்களும் ஜனங்களும்பாழ்பட்டுப்போனார்கள். மேனாட்டில் தர்மத்திற்கும் மதத்திற்கும் சம்பந்தமே இல்லை. மனிதனுடையகடமை என்று அங்கு தர்மம் நடத்தப்படுகிறது. அதனால் அவர்கள் உயர்வோடிருக்கிறார்கள். அவர்கள் நாட்டில் எல்லா பாக்கியங்களும் நிறைந்திருக்கின்றன. மதத்தைவிட தர்மம் உயர்ந்தது என்பதுதான் நமது கொள்கையும். ஆனால் பார்ப்பனர்கள் பிழைப்பின் நிமித்தம் தர்மத்தை மதத்தில்சேர்த்துக்கொண்டு விட்டார்கள். "தர்மம் கெடும்பொழுது நான் வருவேன்" என்றுமே ஒழிய "மதம் கெடும்பொழுது நான்வருவேன்" என்று பகவான் கிருஷ்ணர் சொல்லவேயில்லை.

இப்பொழுது வேண்டுவது மதத்தில் கலந்த தருமமன்று முதலில் கோடிக்கணக்கான மக்களுக்கு வயிற்றுக்கு ஒருபிடி அன்னம் கிடைக்கட்டும். ஞானத்தை பிறகு பார்த்துக்கொள்ளுவோம். நம்மவர்கள் மண்டையில் மட்டுக்கு மிஞ்சின மதவிஷயங்களைத் திணித்து வைக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் தர்மத்தைப்பற்றிய ஒரு கவலையும் ஏற்படுத்தவில்லை. இந்நிலையில் வெறும்மதத்தின் பெயரைச்சொல்லிக்கொண்டு மக்கள் பசியால் வாடுகிறார்கள். "பசிவந்திட பத்தும் பறந்துபோம்" ஒழுக்கம் ஞானம் ஒன்றும் காணமுடியாமல் பெலஹீனமும் கல்நெஞ்சமும் உட்பகையும் நமக்குள் நிறைவதால் தான் நம் நாடு துக்கத்தை அடைகிறது. சாஸ்திர சித்தாந்தங்கள் லட்சக்கணக்காயும் மதசம்பிரதாயங்கள் கோடிக்கணக்காயும் ஏற்படுத்தலாம் எழுதியும் வைக்கலாம், அவ்வளவு செய்துமென்னபயன்? உண்மைதம உங்களுக்கு கற்பிப்பதுபோல் மற்றவர்களும் உங்கள் தேகங்களின் அம்சங்களேயென்றும் ஏழைகளும்பணக்காரர்களும் புண்ணியவான்களும் பாவிகளும் எல்லோரும் பிரமமென்னப்பட்ட அகண்ட பரிபூரண சொரூபத்தின் அம்சங்களேயென்றும் நீங்கள் மனதார உணர்ந்து எல்லா ஜீவர்களிடத்தும் ஜீவகாருண்ணியத்துடன் பிரவிர்த்திக்கின்றவரையில் மதத்தாலும் அதன் கர்த்தாவான கடவுளாலும் நீங்கள் ஒரு நன்மையுமடையப்போவதில்லை.

## மதம் வேறு குருக்கள் கட்டுப்பாடு வேறு.

மதம் வேறு குருக்கள் கட்டுப்பாடுவேறு என்பதை மறக்கலாகாது. அவை ஒன்றுக்கொன்று தீயும் சாம்பலும் போலாம், மதத்தை மீறிக்கட்டுப்பாடு செல்லும் போது நதியை மணல் மூடுவதுபோல் ஆகிறது. அங்கு நீர் கெட்டுப் பாலைவனம் போல் தோன்றும் இந்த நிலையைக்கண்டு மகிழ்ச்சியடைவோர் மிகக்கேடுகெட்டவர்களென்பது வெளிப்படையானாலும் நாமெல்லாம் அநேகமாக அந்நிலையேமூழ்கிக்கிடக்கிறோம். இதில் மூழ்காத ஜாதியெதுவோ அதுதான் தலைதூக்கும்- ஒருவன் மற்றவனைக் கஷ்டப்படுத்தினால் இருவருக்கும் கேடென்று சமயம் சொல்லுகிறது. மகள் விதவையாகிப்பட்டினி கிடக்கும்போது இன்ன திதியில் அவளுக்கு தாகத்திற்கு ஜலம் கொடுத்தால் பெற்றோர்களுக்கு பாவமென்று குருக்களின் கட்டுப்பாடு சொல்லுகிறது—பச்சாத்தாபத்தாலும் சத்கர்மத்தாலும் ஒருவன் பாவத்தைக்கழுவலாமென்று சமயம் சொல்லுகிறது. கிரகணத்தன்று இன்ன நீரில் முழுகினால் தன் பாவம் தீருவதுடன் பதினான்கு தலைமுறை பிதுர்கள் செய்தபாவமும் தீருமென்றுகட்டுப்பாடுசொல்லுகிறது—எல்லா இடங்களையும் சுற்றி இவ்வழகிய உலகத்தின் வியப்புகளைக் கண்டுகளிக்கவேண்டுமென்று சமயம்சொல்கிறது- கடலைத்தாண்டினால் பாவமென்று கட்டுப்பாடுசொல்லுகிறது—எக்குடிப் பிறந்தாலும் உண்மை உடையவன் தொழத்தக்கவன் என்று சமயம் சொல்லுகிறது. பிராமணனாய்ப் பிறந்தவன் மகாபாவியானாலும் அவன்தான்வணங்கத்தக்கவன்என்று குருக்கள்கட்டுப்பாடு சொல்கிறது—புருடனுக்குப் பெண்ஜாதி துணையாயிருந்து எப்படி ஊழியம் புரியவேண்டுமோ அப்படியே பெண்ஜாதிக்கு புருடன் செய்யவேண்டுமென்று சமயம் சொல்லுகிறது பெண்ஜாதி வீட்டிற்கு விலக்காயிருக்கும் சமயம் நோயுற்று பேச்சற்று நாக்கு இழுத்து கிடந்தாலும் புருடன் தொட்டு தண்ணீர் கொடுத்தால் நரகத்திற்குப் போவானென்று கட்டுப்பாடு சொல்லுகிறது--- பெண்ணும் ஆணும் வயது வந்து பக்குவமடைந்து இருவர் பக்குவமும் பூரணப்பட்டபின் விவாகம்செய்துகொண்டு சுகமாய் இருங்களென்று சமயம் சொல்லுகிறது. ஒருவயதிலிருந்து பத்து வயது வரையிலும் பத்து லட்சம் முண்டைகள் (விதவைகள்) நிரப்பிக்கொள்ளுங்கள் என்று கட்டுப்பாடு சொல்லுகிறது—பக்குவமான ஒத்த ஆணும் பெண்ணும் பள்ளியறைக்குப் போங்களென்று சமயம் சொல்லுகிறது. அறுபது வயது ஆணுக்கும் பத்து வயது பெண்ணிற்கும் விவாகமான மறுநாளே வீட்டிற்குள் இருவரையும் பிடித்துத்தள்ளி பூட்டு என்று கட்டுப்பாடு சொல்லுகிறது—ஜீவகாருண்யமும் எல்லா ஆத்மாக்களிடத்தும் அன்புமே கடவுளென்றும் இதைத் தெரிந்துகொள்ளுகிறவனே கடவுளை சேவிக்க லாயக்குடையவனென்று சமயம் சொல்லுகிறது. கடவுளை சேவிக்கப்போகும் வழியில் தண்ணீரில்லாமல் சாகும் ஒருவனுக்கு தண்ணீர் கொடுத்தால் அவன் பிழைப்பான் என்றபட்டாலும் அவனுக்குத் தண்ணீர்கொடுப்பதும் அவன் நிழல் நம்மீது படுவதும பாவம் என்று கட்டுப்பாடு சொல்லுகிறது--- பாவத்தில் பெரியபாவம் குடிக்கத்தண்ணீர் இல்லையென்பது, ஆதலால் தவித்தவாய்க்கு தண்ணீர் ஊற்றாதவன் பாவியென்கிறது சமயம். வீட்டிலிருந்து தண்ணீர்கொண்டு

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.)

# சுயமரியாதைச்சங்கங்கள் அவசியந்தானா? ஆம். ஆம்.

"குடி அரசு" ஆசிரியரும், வைக்கம் வீரருமாகிய திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் இரவு பகலாக தமிழ்நாடெல்லாம் சுற்றி பலபல இடங்களில் தென்னிந்திய உரிமைச் சுயமரியாதைச் சங்கங்கள் நிறுவிக்கொண்டு வருவதும், அதன்மூலமாக பிராமணரல்லாதார் சுயமரியாதைப்பேறு அடையும்படி பிரசாரம் செய்து வருவதும் யாவரும் அறிந்ததொன்றாகும். அவர் செல்லுமிடங்களில் ஆங்காங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளிலிருந்து தமிழ்நாடு பூராவும் அவரை ஆதரிக்கிறதென்பதும் வெளிப்படை. ஆயினும் விரல்விட்டெண்ணிவிடக் கூடிய சிலர் இதை வெறுப்பதாய் காட்டிக் கொள்கிறார்கள். அதை உள்ளாடி நோக்கும் போது பொறாமையால் என்பதே சிறப்பாய் புலப்படும். நமது நாடு இப்போது சுயராஜ்யம் வேண்டுகிறது. இதற்கு எல்லாரும ஒன்றுபட்டு நிற்கிறார்கள். "நமக்கு எதற்காக சுயராஜ்யம்? இப்போது இவ்வளவு பெரிய காட்டிலிருக்கும் உத்தியோகமெல்லாம் நம்முடையது; வியாபாரம் எல்லாம் நம்முடையது, விவசாயமெல்லாம் நம்முடையது, தந்தி, தபால், ரயில், கப்பல், போலீஸ் இலாகா, கல்வி, இன்னும மற்ற எல்லா ஸ்தாபனங்களிலும் பெரும்பாலும இந்தியர்கள். கடலில் பெருங்காயம் கலக்கிய போலுள்ள ஆங்கிலேயர்கள் ஆயிரத்து இருநூறு இருப்பதுகள்தான் இங்குண்டு. எல்லாமிருக்க எதற்கு நமக்கு வேறே சுயராஜ்யம்?" வாஸ்தவம், எல்லாமிருந்தாலும் நமக்கு சுயமரியாதையில்லை. நமக்கு அந்நீதி வேறு, ஆங்கிலேயர்களுக்கு வேறு. நாம் ஆளப்படும் ஜாதியாரென்றும், அவர்கள் ஆளும் ஜாதியாரென்றும் பாகுபாடும் இறுமாப்பும் உத்தியோகங்களில் நமக்கு கம்மி சம்பளமும் அதே உத்தியோகங்களில் அவர்களுக்கு அதிக சம்பளமும் அதுபோலவே உபகாரச் சம்பளங்களும. நமக்கு மோட்டார் ஓட்டும் ஒருவர் ஆங்கிலேயரானல் அவர் லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருக்கலாம், அவருக்கு சம்பளம் கொடுத்துவருகிற மோட்டார் சொந்தக்காரராகிய பிரபு லைசென்ஸ் இல்லாது துப்பாக்கி வைத்திருக்கமுடியாது. இதுபோலவே கீழ்நாட்டு மேல்நாட்டு வியாபாரங்களிலும் மற்ற கல்வி வகையறுக்களிலும் சொல்லலாம். அது யாவருக்கும் தெரிந்திருப்பதால் விரிவஞ்சி விடுகிறேன். நாம் கொடுக்கிற வரிப்பணத்தால் அரசாங்கம் நடக்கிறது. ஆனல் நாம் கொடுக்க கடமைப்பட்டோமே தவிர அதை செலவு செய்ய நமக்கு அதிகாரமில்லை. இதைத்தான் சுயமரியாதை இல்லையென்பது. அதற்காக நமக்கு சுயராஜ்யம் வேண்டும். அப்போது எல்லா அதிகாரங்களும் நம்மவர்களுக்குள்ளிருக்கும். நமதிஷ்டப்படி செலவு செய்து, நமது மக்களையும் தேசத்தையும் செழுமைப்படுத்தலாம். நமக்குள் ஏற்றத் தாழ்வு என்றுசொல்லும்பகைச்சொற்களும போய் சகோதரத்வம் வலுக்கும்என்கிறோம்.

அதுபோலவே இப்போது அநேக வருஷங்களாக தாங்களே பிறப்பில் உயர்ந்தோரென்றும் மற்றவர்கள் தாழ்ந்தோரென்றும் பிராமணன், சூத்திரன், பஞ்சமன் என்று பிறப்பில் ஏற்றத்தாழ்வு பேசிக்கொண்டும் ஒரு வகுப்பார் இது படிக்கலாம் ஒரு வகுப்பார் படிக்கக்கூடாது; ஒரு வகுப்பார் இது செய்யலாம் ஒருவர் இது செய்யப்படாதென்று வழக்கத்தை யனுசரித்தும் அதற்காதாரமாக சில புராணங்களை எழுதி வைத்துக்கொண்டுமிருப்பதால் பிராமணர் பிராமணரல்லாதார் என்கிற பூசல் நாளுக்குநாள் வளர்ந்து பகைமையை உண்டாக்கிவிட்டது. அந்தப்பகை ஒழிய வேண்டுமானல் பிறப்பினல் ஏற்றத்தாழ்வில்லை என்ற உண்மையை ஒவ்வொருவரும் தெரியவேண்டும் இதைத் தெரியக்கூடிய மார்க்கத்தில் ஒவ்வொருவரும் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி பிரயாசை எடுத்துக்கொள்ள ஒவ்வொரு பிராமணனும், பிராமணரல்லாதாரும் முஸ்லீம் கிறிஸ்துவர் இன்னும் சகோதர பாவத்தை விரும்புகிற ஒவ்வொருவரும் கடமைப்பட்டுள்ளார். ஆனல் இப்போது அவர்களுக்குள் யாருக்கு சுயமரியாதை என்பது முற்றிலுமில்லாமல் இருக்கிறார்களோ அவர்களுக்கிருக்கிற ஒரு அரிதமும துக்கமும் மற்றவர்களுக்கிருக்க ஞாயமில்லை. இப்போது பழக்க வழக்கங்களினாலும் புராணக் கதைகளாலும், பிராமணர்கள் எல்லாத் துறைகளிலும முன்னேறியிருந்தமையால் மற்றவர்கள் முன்னேற்றமடையக் கூடாதவாறு தங்கள் செல்வாக்கால் தடுத்துவந்தமையால் அவர்கள் கை மேலாகி சமுதாயங்களிலும் சரி, உத்தியோகப் பதவிகளிலுஞ் சரி அவர்களுக்கு சுயமரியாதைகளில் யாதொரு குறைவுமில்லை. முஸ்லீம் சகோதரர்களுக்கு அவர்களிட ஒற்றுமையினலும் மாஜி ராஜ வம்சத்தார் என்ற செல்வாக்கினலும் ஹிந்துமதம் என்ற பெயரால் கட்டுப்பட்டு பிராமணர்கள் என்ற கத்தியால் அறுபடவேண்டியதில்லை. அதுபோலவே கிறிஸ்து சகோதரர்களும், அவர்கள் இப்போது ஆளும ஜாதியினர்களின் மதத்தைத் தழுவியிருப்பதால் யாருக்கும் கட்டுப்படவேண்டியதில்லை. ஆகையால் மனிதனுக்கு உடற்பிறப்பாகிய சுயமரியாதை பிராமணர் முகம்மதியர், கிறிஸ்துவர் இவர்களுக்கெல்லாம் ஏற்கனவேயிருந்துவருவதால் அவர்களுக்கு வேண்டியதாகஇல்லை. இப்போதுசுயமரியாதையற்று திரிகிறவர்கள், ஏனைய பிராமணரல்லாதாரும் தாழ்த்தப்பட்டவர்களுந்தான். இவர்களுக்கு இப்போதேற்பட்டிருக்கும் இந்தத் தாகம் கிரமந்தானா அல்லது எந்த வகுப்பார் பேரிலாவது துவேஷத்தினலா? பொறாமையாலா? அல்லது அதிகப் பிரசங்கித்தனமா? என்று யோசிப்போமானல் இந்தத் தாகம் பல நாட்களாக அடிமைப்பட்டு மிருகத்தினும் கடையாக நசுக்கப்பட்டு இந்த ஜென்மமும் ஒரு ஜென்மமா என்று வெறுப்பேற்பட்டு எழுந்த ஒரு சக்தியென்றே சந்தேகமறச் சொல்லலாம். ஈஸ்வரனல் படைக்கப்பட்ட சர்வான்மாக்களும சுதந்திரம் பெற்றவை ஒருவர் சுதந்திரத்தை மற்றவர் ஒடுக்கமுடியாது. மனிதனகப் பிறந்த உத்தம வகுப்புகளில்கூட நீ சூத்திரன் நான் பிராமணன், நீ தொடாதே, பார்க்காதே, வீதியில் நடக்காதே, நீ வேதம் படிக்கக்கூடாது, மந்திரம் சொல்லக்கூடாது, தபசு செய்யக்கூடாது என்றும், இது சூத்திரன் சாப்பிடும் இடம், இது பிராமணன் சாப்பிடும் இடம், சூத்திரன் பிரவேசிக்கக்கூடாது என்றும், கோவிலில் சூத்திரர்கள் இதுவரை வரலாம், பிராமணன் எங்கும் போகலாம், சூத்திரன் தூணைத் தொடக்கூடாது, கம்பத்தைத் தொடக்கூடாது, விபூதி கையில் வாங்கப்படாது தரையில் விழுந்து கும்பிடக்கூடாது, பொங்கல் பூசையை பார்க்கக்கூடாது என்றும், ரயில் வண்டிக்குப் போனாலும் இங்கே பிராமணாள் உட்கார்ந்திருக்கிறார்கள் இடமில்லை போ என்று சொல்லிவிட்டு, எவனாவது பிராமணன் வந்தால், வாருங்கோ வாருங்கோ என்று உபசரிப்பதும் 50 வயதுடைய ஒரு பிராமணரல்லாதானை 15 வயதுடைய பிராமணன் வாடா போடா என்று மரியாதையில்லாமல் பேசுவதும் உயிர் போவதாயிருந்தாலும் ஒரு டம்ளர் தண்ணீர் சூத்திரனுக்குக் கொடுத்தால் வீட்டிலுள்ள தண்ணீர் பூராவும் தீட்டாய்விட்டதென்று சொல்லுவதும், பிராமணப் பையனுடன் பிராமணரல்லாத பையன் சாப்பிடுவதைப் பார்த்தால் ஒரு வருஷம் தீர்த்த யாத்திரை செய்யவேண்டுமென்பதும் எவ்வளவு தூரம கல்நெஞ்சுடையோர் செய்கையென்பது சொல்லவும் வேண்டுமா? இதை தலைமுறை தலைமுறையாய் அனுபவித்து வேதனைப் பட்டபிறகே ஜஸ்டிஸ் இயக்கம் தோன்றிற்று. அதை ஒடுக்க நமது பிராமண சகோதரர்கள் செய்தமுயற்சி ஒரு ராமாயணம் என்பது யாவரும் தெரிந்த விஷயம். இருந்த போதிலும் அந்த உத்தம சக்தி எங்கெங்கேயோ மறைந்திருந்து இப்போது புத்துயிர் பெற்று "குடி அரசு" என்றும், நாயக்கரென்றும் போர்கொண்டு வந்துவிட்டது. இது கர்மபலன், இயற்கை தேவியின் திருவிளையாடல், உதிக்கும்சூரியனை கைகொண்டு மறைக்க முடியாதென்று நினைத்து தாராளமாய் வழிவிடவேண்டியதைத்தவிர வேறு மார்க்கமில்லை. யார் பேரிலும் குற்றம் சொல்ல ஞாயமில்லை. ஆகையால் பிராமணரல்லாத பெருங்குடி மக்களே! நீங்கள் இனி ஒரு வினடியும் இச்சந்தர்ப்பத்தை வீணாக்காமல் சங்கங்களை ஏற்படுத்தி, "குடி அரசு," "திராவிடன்" பத்திரிகைகளை வளரச்செய்து இதுவரை நம் அஜாக்கிரதையாலும், மூடக் கொள்கையாலும், புராணக் கூற்றாலும், பழக்க வழக்கங்களாலும் இழந்திருந்த சுயமரியாதையைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். அதுதான் சுயராஜ்யத்தின் தத்துவம். அந்தச் சுயமரியாதையை அடைய நமக்கு ஆற்றலில்லாவிட்டால் இப்போது கேட்கும் சுயராஜ்யம நமக்கு வேண்டவே வேண்டாம்; முக்காலும் வேண்டாம். எந்தப் பிராமணரையும் பகைக்கவேண்டுவதில்லை. நாம நமது முன்னேற்றத்திற்கே பாடுபடுகிறோம். அவர்களிட முன்னேற்றத்திற்கு நாம எப்போதும் குறுக்கிடவில்லை. நமக்கு சுயமரியாதை ஏற்பட்டாலொழிய பிராமணருக்கும் நமக்கும் உண்மையான சகோதரத்துவம் ஏற்படாது.

க. வா. வெங்கிடாசலம் பிள்ளை,

# செங்கல்பட்டில்

## ஸ்ரீமான்கள் ஈ.வெ. இராமசாமி நாயக்கர், தண்டபாணி பிள்ளை, ஆரியா, கண்ணப்பர்.

## கதர்ச்சாலை திறப்பு விழா

ஜஸ்டிஸ் நிதிக்கு ரூபாய் 500 நன்கொடை.

கடந்த சனிக்கிழமையன்று பிற்பகல் 3-30 மணிக்கு செங்கல்பட்டு ரயில்வே ஸ்டேஷனுக் கருகிலுள்ள பெரிய தெருவில் 100 நெ. கதவிலக்கமுள்ள கட்டடத்தில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கத்தின் திறப்பு விழாவின் சம்பந்தமாக "குடி அரசு" ஆசிரியர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களும், ஸ்ரீ சுரேந்திரநாத் ஆரியா அவர்களும் ஸ்ரீமான் என். தண்டபாணிப் பிள்ளை அவர்களும், திராவிடன் ஆசிரியர் திருவாளர் ஜே. எஸ். கண்ணப்பரவர்களும் சென்னையிலிருந்து மோட்டாரில் வந்து சேர்ந்தனர். அவர்களை ஸ்ரீமான் அப்பாசாமி முதலியார், முனிசிபல் சேர்மன் ஸ்ரீமான் ஏகாம்பர முதலியார் முதலியவர்களும மற்றும் பிரபல பிராமணரல்லாத பிரமுகர்களும் வரவேற்று உபசரித்தனர்.

### கதர்ச்சாலைத் திறப்பு.

பிற்பகல் 2 மணிக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டபின்னர் 3 மணிக்கு ஸ்ரீமான் ஜோசப் ரோமன் பி, ஏ. பி எல். அவர்களின் தலைமையில் கூடிய பெருங்கூட்டமொன்றில் தென் இந்திய நலவுரிமைச்சங்கத்தாராலும செங்கற்பட்டு ஜில்லா வாசிகளான பிராமணரல்லாத பிரமுகர்களாலும் வைக்கம் வீரர் உயர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களுக்கு நல்வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன.

ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் பத்திரத்திற்கு பதிலளிக்கையில் கதர் உடுக்க வேண்டுவதன அவசியத்தையும் கதர் உடுத்துவதினால் ஏழை பிராமணரல்லாத ஸ்திரீகளுக்கும் மற்றையோருக்கும வேலை கொடுப்பதுடன் பிழைப்புக்கும் வழி யேற்படுவதாயும் இயந்திரங்களின் மூலமாய் நெசவுத் தொழிலால் சுமார் ஆயிரம பேர்களுக்கு பிழைப்புக்கு வழியேற்பட்டபோதிலும் பல ஆயிரக்கணக்கான ஏழை மக்களின் பிழைப்பைக் கெடுத்துவிடுவதாகின்றதென்றும், மேலும் அத்தகைய இயந்திரஸ்தாபனத்தின் சொந்தக்காரர்களுக்கும் அவ்வளவான லாபமுமில்லை என்றும், நம நாட்டிலிருந்து ஒரு இராத்தல் பஞ்சை ஆறு அணுவுக்கு வாங்கி வெளிநாட்டார் நூல் நூற்று மல் துணியாக அனுப்புவதை நம்மவர்களனைவரும மொத்தத்தில் இரண்டரை ராத்தலுக்கு 15 ரூபாய் கொடுக்கவேண்டுவதாகின்றதென்றும், நம மவர்களனைவரும கதர் உடுத்துவதால் நம நாட்டுச் செல்வம் வெளிநாட்டுக்குப்போக வழியில்லை என்றும், மதுரை மகாநாட்டுத் தீர்மானப்படி அனைவரும் கதர் உடுத்தி பிராமணரல்லாத நம் ஏழை கிராமவாசிகளான ஆண் பெண்களின் ஜீவனத்துக்கு வழியுண்டாக்கிச் சுகமடையும்படி கேட்டுக் கொள்வதாயும் கூறினார். பிறகு வாலாஜாபாத் இந்து பாடசாலை மாணவர்களால் தேசீய கீதங்களும் கதர் பாட்டுகளும் பாடப்பட்டபின் பெருத்த கரகோஷத்தினிடையே ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் கதர்ச்சாலையைத் திறந்துவைத்தார்.

### நகர் வலம்

பின்னர் மாலை 4-30 மணிக்கு மேள வாத்தியங்களுடன் ஸ்ரீமான்கள் நாயக்கர், ஆரியா முதலானவர்களை நகர்வலமாக கூட்டங்கடை பெறுமிடமாகிய முசாபர் பங்களா மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. வழியில் பலவிடங்களில் தலைவர்களுக்கு மாலை சூட்டப்பட்டது. முசாபர் பங்களா மைதானத்தில் பச்சைப்பந்தலிட்டு கொடிகள் தோரணங்களாலும அலங்கரிக்கப்பட்டு எங்கும் ஜமக்காளங்கள் பரப்பப்பட்டு சுற்றிலும் அநேக நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. ஊர்வலம் அங்குவந்து சேர்ந்ததும் தலைவர்களை பாண்டுவாத்தியங்களுடன் எதிர்கொண்டு பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

### பிரபலர்களின் பேருரைகள்.

பின்னர் ஸ்ரீமான் ஜோசப் ரோமன் பி. ஏ. பி, எல் அவர்களின் தலைமையில் பிராமணரலலாத பெருமக்களின் பெருங்கூட்டமொன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கான பிராமணரல்லாத பிரமுகர்களும் அநேக மாதர்களும் வந்திருந்தனர். சிறுவர்கள் சிலரால் கடவுள் வணக்கமும் தலைவர்களின் வணக்கமும் நிகழ்த்தப்பட்டு தேசீய கீதங்கள் பாடப்பட்டதுடன் கூட்ட நடவடிக்கைகள் துவக்கப்பட்டன.

### ஸ்ரீ சுரேந்திரநாத் ஆரியா.

முதலில் பெரும கரகோஷத்தினிடையே பேசிய ஸ்ரீ சுரேந்திரநாத் ஆரியா அவர்கள் பிராமணரல்லாத மக்களின் தற்போதைய நிலையை விளக்கிக்கூறி, பிராமணரல்லாதார் சுயமரியாதையை நிலைநிறுத்தி தாங்களும்கடவுளின் அமசங்கள்தான் என்பதை விளக்கி மக்கட் பிறவியில் உயர்வுதாழ்வில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்துதற்கு இத்தகைய சங்கங்களின் மூலமாக பாடுபட்டுபழைய மூடக் கொள்கைகளையும் கண்மூடித் தனமான நம்பிக்கைகளையும் ஒழிக்கவேண்டுமென்றும பிராமணரல்லாதாரியக்கந் தோன்றியது மனித சுயமரியாதை அடைவதற்கே என்பதையும், அத்தகைய சுயமதிப்பான தன்மையைப்பெற்று கடவுள் சிருஷ்டியில் ஏற்றத்தாழ்வில்லை என்னும் தத்துவத்தை உணரவேண்டுமென்பதன் பொருட்டு நான் இவற்றை மக்களுக் குணர்த்தி பிராமணரல்லாத பெருமக்களையும் சுயமரியாதையுடன் வாழச்செய்வதற்காகத்தான் காலஞ்சென்ற தலைவர்களான டாக்டர் டி. எம் நாயரும சர் பி. தியாகராயரும் பாடுபட்டனர்என்றும் பிராமணரல்லாதாரியக்கம் தழைத்தோங்குவதற்கு "ஜஸ்டிஸ்," "திராவிடன்," "குடி அரசு" ஆகிய மூன்று பத்திரிகைகளின் அபிவிருத்தியும் இன்றியமையாதது. பிராமணரல்லாத சமூகத்திற்கு இப்பத்திரிகைகள் மூன்றும் இரத்தத்தை போன்றதாகும். இவை வாடுமாயின் பிராமணரல்லாத சமூகமும் வாடி வதங்கிப் பல துன்பங்களுக்குட்பட்டு மீண்டும் இழிவு நிலைக்கு வந்துவிடுமென்பதை மறந்துவிடக்கூடாது. பிராமணரல்லாத வாலிபர்களும பத்திரிகைகளின் அபிவிருத்தியில் ஊக்கங்காட்டி போதிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும கூறினார்.

### திரு தண்டபாணி பிள்ளை.

அடுத்தபடியாக ஸ்ரீமான் தண்டபாணிப் பிள்ளையவர்கள் பேசுகையில், காங்கிரஸிலிருந்துகொண்டு முன்னர் நாமும் ஸ்ரீமான்கள் ஆரியா முதலானவர்களும் பிராமணரலலாதாரியக்கத்தின் உண்மையான தத்துவத்தையுணராமல் வாயாரத் திட்டி பிராமண மாய்கையிலீடுபட்டிருந்ததாலான பலன்களை எடுத்துக்கூறி காங்கிரசிற்கு மகாத்மா, தாஸ், நாயக்கர் போன்ற பல தியாகிகளால் மதிப்பே தவிர வேறில்லை. தற்போது காங்கிரஸ் சூழ்ச்சிக்காரரான பிராமணர் கைப்பட்டுழல்வதனால்தான் தாங்களனைவரும்பிரிந்து தமது அனுபவத்தை பிராமணரல்லாத பெருமக்களுக்குசொல்லி அவர்கள் இனிச் சுயமரியாதையுடன் நடந்துகொண்டு தமது நேர்மையான உரிமைகளைப் பெற்று வாழவேண்டுமென்பதுதான் தங்களுடைய கோரிக்கை எனக் கூறினார். பின்னும் அவர் பேசுகையில், பிராமணர்கள் மதத்தின் பெயராலும, பழக்க வழக்கங்களை ஆதாரவாகக் கொண்டும செய்துவரும் அளவற்ற அநீதிகளையும், புரோகிதர்களின் கொடுமைகளையும புரட்டுகளையும தெளிவாக விளக்கிக்காட்டி சிறைச்சாலையிலும், கோவிலிலும் மற்றும சிற்றுண்டிச்சாலை முதலாக எங்கு பார்த்தாலும் பிராமணர்கள், பிராமணரல்லாதமக்களைத் தாழ்மையாக நடத்திவருவதைப் பல உதாரணங்களால் விளக்கி இனி பிராமணரல்லாத மக்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமாயின், தம்இல்லங்களில் நடக்கும சுபாசுப காரியங்களில பிராமண புரோகிதர்களைகொண்டு ஒன்றும் நடத்தாமல் தம்முள்ளேயே பெரியவர்களாயிருப்பவர்களும் தம்முடன் உண்டு உடுத்து உறவாடி சமத்துவம பாராட்டும மக்களைக் கொண்டும்நடத்தவேண்டுமென்றும்கூறினர்.

### திரு. இராமசாமி நாயக்கர்.

பின்னர் பெருத்த கரகோஷத்தினிடை

பெ நமர் இரண்டுமணி நேரத்திற்கதிகமாக சொன்மாரி பொழிந்த திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் பேசுகையில் செங்கற்பட்டு ஜில்லா வாசியும் பிரபல பிராமணரல்லாத தலைவருமான ஸ்ரீமான் அப்பாசாமி முதலியார் அவர்கள் நமதியக்கத்தின் சம்பந்தமாக பேரூக்கம் காட்டி வருவதை விளக்கி அப்பெரியார் அன்று ஜஸ்டிஸ் பத்திரிகையின் நிதிக்கு ரூ. 500 நன்கொடையாகத் தம்மிடம் கொடுத்திருப்பதைப் பெருத்த கரகோஷத்தினிடையே கூட்டத்தினருக்கு எடுத்துக் காட்டினார். பின்னும் அவர் பேசுகையில் காங்கிரசின் பெயராலும் சுயராஜ்யமென்னும் பதத்தின் பெயராலும், மக்களை ஏய்த்து பல அக்கிரமங்கள் செய்யப்படுகிறது. சுயராஜ்யமின்னதென்று மகாத்மா காந்தியும் இன்னும் சொல்லாமல் அதனை அடைவதற்குத் தகுதியாகுங்கள் என்று தான் சொல்லுகின்றார். மதுரையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் திட்டங்களை நம் பிராமணரல்லாத மக்கள் கைக்கொண்டு மனப்பூர்வமாகப் பாடுபடுவார்களாயின், சுயராஜ்யம் தானாகவே தேடிக்கொண்டு வந்து விடும். நாம் சுயராஜ்யமடைவதற்கு முன் சுயமரியாதையை நிலைநிறுத்த வேண்டுவது முதற்கடமை. சுயமரியாதையில்லாத சுயராஜ்யம் வந்தும் பயனில்லை. இச்சுயமரியாதையை அடைவதற்கு பாமர மக்களுக்குள் போதிய பிரசாரம் செய்யவேண்டும். இதற்கு "ஜஸ்டிஸ்" "திராவிடன்" பத்திரிகைகளின் உதவி அத்தியாவசியம். அப்பத்திரிகைகளின் வளர்ச்சி பிராமணரல்லாத சமூகத்தின் கதிமோட்சத்திற்கான வளர்ச்சி என்பதை மறக்கக்கூடாது. பிராமணரல்லாத சங்கமென்னும் பெயர் துவேஷம் காரணமெனச் சொல்லப்பட்டபோதிலும் சரி, அதற்குக் காரணமானவர்கள் அவர்கள் தான். அதில் துவேஷமிருக்கின்றதென விளங்கவில்லை. நமது சுயமரியாதைக்காக நாம் பாடுபட்டால் அது துவேஷமென்று சொல்லுவதா? கொசுக்கள் கடிக்காமல் கொசுவலை போட்டுக்கொள்வது கொசுவின் மீது துவேஷமாகுமா? திருடன் வருவதற்குத் தடையாக நம வீட்டுக்கதவை அடைத்து வைத்தால் திருடன் மனம் வருந்திப் பட்டினி கிடக்கவும் நேருமென்று யாராவது கதவைத் திறந்து வைப்பார்களா? கதவை மூடி வைத்தால் நாம் ஜாக்கிரதையாயிருப்பதையறிந்து அத்திருடனும் திருந்திக்கொள்ள முயல்வான். அதுபோன்றே நாம் இனி நமது சுயமரியாதையைக் காத்துக் கொள்வதற்கான முயற்சிகள் செய்து பிராமணீய ஆதிக்கத்தையொழிக்க வேண்டும். பிராமண பிராமணரல்லாதார் வித்தியாசமும் இவ்மாதிரிப் போராட்டமும் பண்டைக்கால முதற்கொண்டே நடந்து வந்திருக்கின்றது. இராமாயணம் பாரதம் புராணங்களிலும் இப்பேர் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வேதங்களில பிராமணர்கள் பிராமணரல்லாத மக்களைத் தங்களுக்கு அடிமைப்படுத்தி வைக்கும்படியும், அவர்களை ஒழித்துவிடும்படிக்கும் இந்திரன் முதலான தெய்வங்களைப் பிரார்த்திப்பது தவிர வேறில்லை. இதனால் தான் வேதத்தை பிராமணரல்லாதார் படிக்கக் கூடாதென்று சூத்திரம் வாதம் செய்தனர். புத்தர் காலத்திலும் பிராமணர்களின் அநீதியை ஒழித்துச் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சி செய்யப்பட்டு, புத்தமதம் பிரசாரம் செய்யப்பட்டது. பிராமணர்கள் பண்டைக்கால முதற்கொண்டே பல சூழ்ச்சிகள் செய்துவருகின்றனர். ராமர் ஆட்சியில் பிராமணரல்லாத வாலிபன் ஒருவன் வேதம்படித்து தபசு செய்து வந்ததால் பிராமணச்சிறுவன் ஒருவர் இறந்து விட்டதாகச் சொல்லி அப்பிராமணரல்லாத சிறுவனைக் கொன்ற பின்பு பிராமணச் சிறுவன் பிழைத்துக்கொண்டதாக இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தகைய மானக்கேடான விஷயங்களைக் கேட்கத்தான் நகரங்கள் பெரும் பொருள் செலவு செய்கின்றனர். நாம் நமது சுயமரியாதையைக்காத்துக்கொண்டு நம மக்களின் அபிவிருத்திக்காகப் பாடுபடுவோமானால் அது அவர்களுக்குத்துவேஷமாகத்தானிருக்கும். சுயமரியாதையைக் காத்துக் கொள்ளும் விஷயங்களில் பழைய மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்து கிடக்கும் பெரியவர்கள் சற்று தயங்கிய போதிலுங்கூட நமது வாலிபர்கள் தான் ஒரே உறுதியுடன் நிற்கவேண்டும். பெரியவர்களும் அவர்களுக்குத் தேவையான உதவிபுரிய வேண்டும். சர்க்கார்வரியை விட பிராமணர்களின் வரி அளவில்லாமலும் கேள்வி முறையில்லாமலும் பல தலைமுறையாகப் போய்க்கொண்டிருக்கின்றது. கோவில்களின் இழிவான நிலைமைகளைச் சீர்திருத்தி அவற்றின் வருமானங்களைக் குறித்தும் செலவுகளைக்குறித்தும் கணக்கு வைக்கச் செய்தவன் பொருட்டு நமது தலைவர் பனகால் அரசர் தேவஸ்தானச் சட்டம் இயற்றியபோது பிராமணர்கள் மதத்திற்கே மோசம் வந்துவிட்டதாயும், மத விஷயங்களிலும் சர்க்காரின் ஆதிக்கத்தைப் புகுத்துவதாயும் கூச்சலிட்டனர். கடவுளுக்கு நாமம் வடகலையென்றும் தென்கலையென்றும் மல்லுபிடித்து சச்சரவிட்டுக்கொண்டு அதனைத் தீர்ப்புச்செய்வதற்கு சர்க்காரின் உதவியை நாடி வெள்ளைக்காரர்களின் தீர்மானப்படி செய்து யாத்திரம் சர்க்கார் தலையிட்டதாக வில்லையா? மற்றும் ஜீயர் கொடிபிடிப்பது முதலானவற்றிலும் சர்க்கார் தலையிட்டு தீர்ப்புச்சொல்லக் கேட்கவில்லையா? கணக்கு வைத்தால் தாங்கள் மோசம்செய்வதற்கிடமில்லையே என்ற ஏக்கத்தால் கூச்சலிடுவதை உலகத்தார் நன்றுணர்ந்து கொண்டனர். மேலும் இச்சட்டத்தால் இந்து மதத்திற்கு மோசம் வந்து விட்டதெனக் கூச்சலிடும் இந்த ஜில்லா பிரதிநிதியான ஆச்சாரியாரும் அந்தத் தொகுதியின் பெயரால் நின்றார். மகமதியரல்லாத தொகுதியின் பெயரல்லவா? சர்க்காரால் இந்து மதத்திற்கென்று பிரதிநிதித்துவமளிக்கப்பட்டிருக்கின்றதா? மகமதிய கிறிஸ்தவ மதங்களுக்குப் பிரதிநிதித்துவமிருப்பது போல இந்து மதத்திற்கில்லாததைக் குறித்து இப்புலிகள் இதுவரையில் வாயையாவது திறந்திருக்கின்றனரா எனக் கூறி, முடிவில் மதுரை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அநுசரித்து சுயமரியாதையை நிலைநாட்டி தீர்மானத்திட்டத்தின் கீழ் செவ்வனே வேலை நடத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்வதாகக் கூறினர்.

### திரு. ஜே. எஸ். கண்ணப்பர்.

பிறகு நீண்ட கரகோஷத்தினிடையே பேசிய திரு. ஜே. எஸ் கண்ணப்பர் அவர்கள் இந்த ஜில்லாவில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தென் இந்திய நலவுரிமைச் சங்கத்தின் காரிய நிர்வாகிகளின் பெயர்களை வாசித்துக் காட்டி, அச்சங்கத்தால் விளையும் நற்பயன்களை விளக்கி, பிராமணரல்லாத மந்திரிகள் செய்துள்ள பல நன்மைகளையும் தெளிவாக எடுத்துக் கூறினர். பின்னும் அவர் பிராமணரல்லாத கட்சி குடியை ஒழிக்கக் கருதவில்லை என்று விரோதிகள் குறை கூறி வந்ததை எடுத்துக்காட்டி, அவர்களுடைய ஆதரவைப்பெற்ற மந்திரி சபையாகிய சுயேச்சை மந்திரி சபையினர்களால் மந்திரி கனம் ஆரோக்கியசாமி முதலியார் வேலூரிலும் செங்கற்பட்டு தாலூகா ஆபீசிலும் பேசிய போது "குடியை நிறுத்துவது சாத்தியமல்ல அதனால் வருமானம் போய்விடு"மென்று குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்டி மற்றும் திருச்செங்கோட்டில் கனம் சுப்பராயன் தமிழ் பல்கலைக் கழகம் அவசியமில்லை எனக் கூறியிருக்கும் பிற்போக்கான செய்கைகளையும் தேச பத்திரிகைகளென்னும் பிராமணப் பத்திரிகைகள் கண்டியாமல் மௌனமாகவிருந்திருப்பதையும் விளக்கினர். முடிவாக அவர் இன்னும் அத்தகைய சங்கங்கள் பலவற்றை ஆங்காங்கு ஸ்தாபித்துக் கொண்டு ஊக்கத்துடன் உழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகக் கூறினர்.

### அக்கிராசனர் முடிவுரை.

அக்கிராசனர் முடிவுரை கூறுகையில் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் சிரமம் பாராட்டாமல் அங்கு வந்து அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தி தங்களைத் தட்டி எழுப்பிவிட்டதற்கு வந்தனமளித்து அச்சங்கத்தின் மூலமாகத் தாங்கள் வேலை செய்து வருவதை அவர்கள் கவனித்து அப்போதைக்கப்போது வேண்டிய உதவி புரியவேண்டுமெனக் கோருவதாயும், பிராமணரல்லாத மக்கள் சுயமரியாதையையுணராமல் அசட்டையாக இருந்ததின் பலனை இழிவு நிலைமையை எடுத்துக்காட்டி நாயக்கர் அவர்கள் தங்களைச் சுயமரியாதையுடன் நடந்து கொள்ளும் ஆண்மையுடையவர்களாக்கியதற்குத் தாங்களனைவரும் அவருக்கு நன்றி செலுத்துவதாயும் கூறினர்.

பிறகு முனிசிபல் சேர்மன் ஸ்ரீமான் இ. ஏகாம்பர முதலியார் அவர்களால் அனைவருக்கும் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

### சமபந்தி போஜனம்.

கூட்டம் கலைவதற்கு முன்னதாகவே ஸ்ரீமான் ஏகாம்பர முதலியார் அவர்கள் அன்றிரவு அவ்விடத்திலேயே சமபந்திபோஜனமொன்று நடைபெறப் போவதாக வெளியிட்டு அனைவரையும் அதற்கு வரும்படி அழைத்தார். பின்னர் இரவு 9 மணிக்கு அகில வகுப்புகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான பிராமணரல்லாத மக்கள் சமபந்தி போஜனம் செய்து அகமகிழ்ந்து தத்தம் இருப்பிடம் சென்றனர். (திராவிடன்)

## சுயமரியாதை மகாநாடுகள்.

இவ்வாரம் 12-உ செங்கல்பட்டிலிருந்து ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தண்டபாணி பிள்ளை கண்ணப்பர் ஆகிய மூவரும் செங்கல்பட்டிலிருந்து புறப்பட்டு ஆம்பூர் வந்து சேர்ந்தார்கள். ஆம்பூர் வாசிகள் இவர்களை வாத்தியங்களுடன் வரவேற்று ஊர்வலம் நடத்தி மாலையில் கடைவீதியில் ஒரு பெரிய மகாநாடு கூட்டப்பட்டது. சுமார் 2000 பேருக்கு மேலாகவே ஜனங்கள் வந்திருந்தார்கள். இரவு 12 மணிவரை ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளை புரோகிதப்புரட்டுகளைப்பற்றியும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் நிர்மாண திட்டமும் காங்கிரசின் போலி பார்ப்பனர்கள் சூழ்ச்சியும் என்பது பற்றியும் ஸ்ரீமான் கண்ணப்பர் ஜஸ்டிஸ் கக்ஷியால் ஏற்பட்ட நன்மைகள் என்பது பற்றியும், பேசினார்கள். இரவு 2 மணிக்கு கூட்டம் கலைந்தது. இரவு 12 மணிக்கே வாணியம்பாடியிலிருந்து நாயக்கரை அழைத்துப் போக வந்த கனவான்களுடன் ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையும் கண்ணப்பரும் சென்னைக்கும் ஸ்ரீமான் நாயக்கர் வாணியம்பாடிக்கும் பிரயாணமாகிவிட்டார்கள்.

மறுநாள் மாலை வாணியம்பாடி பாலாற்றில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. மகாநாட்டிக்கு மேள வாத்தியங்களும் பஜனை கோஷ்டியுடனும் ஊர்வலமாகச் சென்று அங்கு ஸ்ரீமான் கரிய கவுண்டர் அவர்கள் அக்கிராசனத்தில் ஸ்ரீமான் நாயக்கர் 3 மணி நேரம் காங்கிரசும், ஜஸ்டிஸ் கட்சியும் என்பது பற்றி நீண்ட பிரசங்கம் செய்தார். குடியேத்தத்திலிருந்து நாயக்கரை அழைக்க வந்த பல கனவான்களுடன் மறுநாள் காலை வாணியம்பாடியிலிருந்து குடியேத்தத்திற்கு சென்றார்கள். குடியேத்தம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தே வாத்தியங்களுடன் முனிசிபல் கவுன்சிலர்களும் சேர்மென் அவர்களும் மற்றும் ஊர்பொது ஜனங்களுடனும் ஸ்ரீ நாயக்கர் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். ஊர் முழுவதும் வளைவுகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் பெருங் கூட்டமாக ஊர்வலம் சென்று ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் வீட்டிற்குச் சென்றதும் அங்கு ஒரு பெரிய விருந்து நடந்தது. மாலையில் சென்னையிலிருந்து ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையும் கண்ணப்பரும் வந்து சேர்ந்தார்கள். மாலை 6 மணிக்கு ஜாகையிலிருந்து மேளவாத்தியங்களுடன் ஆற்றில் கூட்டப்பட்ட கூட்டத்திற்கழைத்துச்சென்றார்கள். அங்கு சுமார் 3000 பேருக்கு அதிகமாகவே கூடியிருந்தார்கள். கவுன்சிலர் ஜனாப் சாயபு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நாயக்கருக்கு குடியேத்தம் திராவிட சங்கத்தாரால் ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்கள் மதச்சடங்குகளுக்குப் பார்ப்பனப் புரோகிதர் கூடாதென்பது பற்றியும், ஸ்ரீமான் நாயக்கர் நிர்மாணதிட்டம் நிறைவேற்றப்பட்டால் அல்லாது பார்ப்பனரல்லாதாருக்கு கதிமோட்சம் இல்லையென்பது பற்றியும் ஸ்ரீமான் கண்ணப்பர் பண்டைச் சரித்திரங்களில் நமது நிலை என்பது பற்றியும் மற்றும் பார்ப்பனரல்லாத கட்சியால் விளையும் நன்மைகள் என்பது பற்றியும் இரவு 10½ மணிவரை பேசினார்கள். பிறகு வாத்தியங்களுடன் ஜாகைக்குப்போய் சாப்பிட்டுவிட்டு உடனே ரயிலுக்கு வந்து ஸ்ரீமான் நாயக்கர் ஈரோட்டிற்கும் ஸ்ரீமான்கள் தண்டபாணி பிள்ளையும் கண்ணப்பரும் சென்னைக்கும் பிரயாணமானார்கள். சென்ற இடங்களில் எல்லாம் கூட்டத்தில் உற்சாகமும் நாயக்கரை ஆதரிப்பதாகவும் மதச்சடங்குகளை பார்ப்பனரில்லாமல் செய்து கொள்ளுவதாகவும் ஆயிரக்கணக்கான பேர்கள் வாக்களித்தார்கள் (ஒரு நிருபர்)

ஸ்ரீமான் நாயக்கர், இவ்வாரம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஸ்ரீமான் நாயக்கர் ஈரோட்டிலிருந்து புறப்பட்டு திருச்சியில் பணக்கால் ராஜாவை சந்தித்து இருவருமாக திருநெல்வேலிஜில்லாவுக்கு போகிறார்கள். அடுத்த வாரம் வேலூர் முதலிய இடங்களுக்கு போவார்.

## யாகமும் பிராமணர்களும்.

இன்னும் ஆரியர் சோமச பானத்தான் வேள்விகள் வேட்டதன்றியும், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், பசுமாடுகள், எருமை மாடுகள், குதிரைகள், மனிதர் முதலிய எண்ணிறந்த பிராணிகளைக் கொன்று வேட்டு அவற்றின் மாமிசத்தைப் புசித்துவந்தார்கள் மனிதன் மனிதனைக்கொன்று புசிக்குஞ் செய்கை எவ்வளவு கொடுமையான செயல்! நக்கவாரம் முதலிய தீவங்களில் வசிக்கும் மிக்க அநாகரிக சாதியாரே இன்றும் நரமாமிசம் புசித்து வருகின்றனர். பிராணிகளில் மனிதர்க்குப் பலவகையாலும் பயன்படுதலுடைய பசு மாடு குதிரை முதலியவற்றைச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்று அவற்றின் ஊனை விரும்பி வேண்டியமட்டும் புசித்து வந்தனராயின், பண்டைக்கால ஆரிய சாதியார் எவ்வளவு கொடியவர்களென்றும் எவ்வளவு அறியாமையுடையவர்களென்றும் எண்ணவேண்டியிருக்கின்றது! இவ்வளவு கொடுஞ் செயலுஞ் செய்துகொண்டு இக்கொடுஞ் செயலுக்குபகாரமாகத் தாம் பாடி வைத்துக்கொண்ட இழிந்த வேதப் பாட்டுகளைத் தமையன்றி வேறான தமிழ் மக்களும் ஒருப்பட்டுத் தழுவிக் கௌரவிக்கும்படி வற்புறுத்திவரும் அவர் செயல் நினையுங்காலெல்லாஞ் சாலவும் வஞ்சனையுடைத்தென்று தோன்றுகின்றது. இத்தகைய கொடுஞ் செய்கையும் சுவர்க்கத்தைத் தருமென்ற அவரது போலிப் பொய்யுரையை மறுத்தற்கென்றே நம்முதுதாவரான தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்

"அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்று திருவாய் மலர்ந்தருளினர். சாங்கியம் என்னும் அரிய தத்துவ சாத்திரம் வகுத்தெழுதிய ஞானசிரேட்டரான கபிலரும் "கணக்கில்லாப் பிராணிகளைக் கொல்வித்து அவற்றின் இரத்தத்தை ஆறாய்ப் பெருகச் செய்வித்தலான் வேதங்கள் அசுத்தமுடையன."* என்று ஓதினர்.

(மறைமலையடிகள்)

## ஈரோடு முனிசிபாலிட்டியார் கவனிக்காவிட்டாலும் போலீசாராவது கவனிப்பார்களா?

ஈரோடு டவுனில் வரவர மோட்டார் கார்கள் மலிந்து விட்டது. ஒரு காராவது ஊருக்குள் மணிக்கு 30, 40 மைல் வேகத்திற்குக் குறைந்து ஓடுகிற வழக்கமே இல்லை. அதிலும் கோர்ட்டு வீதியில் காலை மாலை பள்ளிக்கூடம் கூடும் நேரத்திலும் விடும் நேரத்திலும் ஆயிரக்கணக்கான ஆண், பெண் குழந்தைகள் நடமாடும் காலத்தில் இவ்வண்டிகள் போகும் போக்கை ஏதாவது ஒரு பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள் நேரில் பார்ப்பார்களானால் ஏற்படும் அபாயங்களும் விசையில் கிளம்பும் தூசிகளால் ஏற்படும் கெடுதிகளும் அவர்கள் மனதை வாட்டாமல் இருக்காது. சுகாதாரவாரமென்பதாக வீண்பணச் செலவு செய்து ராஜபக்தி பாட்டுபாடுவதல்லாமல் உண்மையான சுகாதாரம் கவனிக்க எந்த அதிகாரியையும் காணோம். மக்களிடம் இதற்கு என்று வரி வசூலிக்கும் முனிசிபாலிட்டியார் முனிசிபல் பணத்தை யார் சாப்பிடுவது யார் கடனைக்கட்டுவது என்பதில் சண்டைபோட்டுக்கொண்டிருப்பதைத் தவிர சுகாதாரத்திற்கு மார்க்கமில்லை. தெருப்புழுதி அடக்க ரோட்டிற்குத் தண்ணீர் தெளிப்பதற்கு என்று வாங்கின மோட்டார் லாரி புதுவிளக்குமாற்றைப்போல் புதுசில் 10 நாள் வீதி வீதியாய்ச் சவாரி செய்துவிட்டு இப்போது அந்திப்பூப்போல் விளங்குகிறது, அதோடு மாத்திரமில்லாமல் சேர்மென் முனிசிப்பல் பெட்ரோல் எண்ணெயை சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டதைப்பற்றி கிளீனர் ஒருவன் சேர்மென் இடம் ஸ்டேட்மெண்ட் கொடுத்ததற்கு ஆக கிளீனர் உதைபட்டு சேர்மென் மீது மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பிராது கொடுத்திருப்பதாய் தெரிகிறது. இந்த நிலைமையில் ஊர் சுகாதாரம் கவனிக்க ஆள் எங்கே? மோட்டார் கிளீன் செய்ய ஆள் எங்கே, மக்கள் வீட்டுவரி எப்படியோ நாசமாய் போனாலும் போகட்டும். தின்னப்பிறந்தவர்கள் தின்னட்டும் போலீசதிகாரிகள் முனிசிபல் சொத்து திருட்டுப்போவதை அடக்காவிட்டாலும் மோட்டார் வண்டிகளின் வேகத்தையாவது அடக்கமாட்டார்களா என எதிர்பார்க்கிறோம்.

மாஜி கவுன்சிலர்.

## ஸ்ரீமான் சிங்காரவேல் செட்டியார்.

ஸ்ரீமான் எம். சிங்காரவேல் செட்டியார் ஸ்ரீமான் ராமநாதன் மதுரைக்கோவிலில் பார்ப்பனத் தரகர்கள் இல்லாமல் நேரே கடவுளுக்குத் தேங்காய் உடைத்து பூசை செய்ய ஆரம்பித்து மற்ற மக்களுக்கு வழிகாட்டினதை பாராட்டி தந்தி அடித்ததில் ராஜீயத்துறையில் அடிமைத்தனம் ஒழியவேண்டிய அவசியத்தைப்போலவே மதத்துறையில் பார்ப்பனப் புரோகிதர்களுக்கு அடிமையாயிருக்கும் அடிமைத்தனமும் ஒழிய வேண்டியது முக்கியமானதென்றும் தரகர் இல்லாமல் கடவுளைத் தொழ வழி ஏற்படுத்த வேண்டுமென்றும் தந்தி கொடுத்திருக்கிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

அக்ஷய-ஞு மாசி-மீ 9-உ

## ஜஸ்டிஸ் திருநாள்.

பிப்ரவரிமீ 26-தேதி சனிக்கிழமையை ஜஸ்டிஸ் 10வது வருஷ நாளாகக்கொண்டாடும்படி தலைவர் பனகால் ராஜா அவர்கள் பார்ப்பனரல்லாத மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதற்காக ஒவ்வொரு ஊரிலும் உள்ள பார்ப்பனரல்லாத மக்கள் அந்நாளைக் கொண்டாட வேண்டிய விதம் என்னவென்றால் ஜஸ்டிஸ் திராவிடன் குடி அரசு பத்திரிகைகளுக்கு சந்தாதாரர்களை சேர்ப்பதுதான். வாலிபர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் அன்றையதினம் எதாவது ஒரு புது சந்தாதாரரையாவது சேர்த்து விட்டுத்தான் சாப்பிடுவதாக விரதமெடுத்துக் கொள்ளவேண்டும். ஜஸ்டிஸ் பத்திரிகையில், ராய்ட்டர் அசோசியேட் பிரஸ் பிரீ பிரஸ் ஆகிய தந்தி நிருபங்கள் மாதம் 1-க்கு 1000 ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் வாங்கி சென்ற மாதம் முதல் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. திராவிடனுக்கும் அசோசியேட் பிரஸ் நிருபங்கள் வாங்கி பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே பிப்ரவரி-மீ 26-தேதியை இவற்றிற்கு சந்தா சேர்க்கும் தினமாக கொண்டாட வேணுமாய் பார்ப்பனரல்லாத வாலிபர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஈ. வே. ராமசாமி.

### நன்றி செலுத்துகிறோம்.

புதுவருஷ சன்மானம் என்பதாக நமது குடி அரசுக்கு சந்தாதார்களை சேர்த்துக் கொடுக்கும்படி நாம் செய்து கொண்ட விண்ணப்பத்தை அங்கீகரித்து சந்தா தார்களை சேர்த்துக் கொடுத்த நண்பர்களுக்கு நமது நன்றி அறிதலை செலுத்துகிறோம். அதுபோலவே பிப்பரவரி-மீ 26-ந் தேதி திருநாள் கூடியான வரை பிரயாசை எடுத்து ஜஸ்டிஸ், திராவிடன் குடி அரசு ஆகிய பத்திரிகைகளுக்கு சந்தாசேர்த்துக் கொடுத்து ஆதரிக்க வேண்டுகிறோம்.

ரோஜா முத்தையா

### தென் ஆற்காடு ஜில்லா போர்டு தலைவர்.

தென் ஆற்காடு ஜில்லா போர்டு தலைவர் ஸ்தானம் சமீபகாலத்தில் காலியாவதை முன்னிட்டு எற்படுத்தப்பட்ட எலக்ஷனில் இப்போது தலைவராயிருக்கும் ஸ்ரீமான் கே. சீதாராம ரெட்டியார் அவர்களே மறுபடியும் போட்டியன்றியில் ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறாரெனக் கேட்கக் களிப்பெய்துகிறோம். கும்பகோணப் பார்ப்பனர்கள் போன்றோர் கடலூர் ஜில்லா போர்டில் இல்லாததால் தஞ்சை தேர்தல் போல் கோர்ட்டு ஸூட்டுகளும், போட்டி நியமனங்களும் அங்கு காணப்படவில்லை போலும்.

### புதுக்கோட்டை முஸ்லீம் மகா நாடு.

சமஸ்தான முஸ்லீம் பிரஜைகளின் முதலாவது மகா நாட்டில் சைபுல் இஸ்லாம் பத்திகாசிரியரான மௌலானா மௌலவி அஹமது சயீது சாஹிப் அவர்கள் 15-2-27ல் அக்கிராசனம் வகித்து நிகழ்த்திய அக்கிராசனப்பிரசங்கம்மிகவும்நீண்டதாகையால் நமது பத்திரிகையில் முழுதும் பிரசுரிக்க முடியாததற்கு மிக வருந்துகிறோம். நாமறிந்தவரையில் மௌலானா அவர்கள் நமது நாட்டுப் பெருமபான்மையான அரசியல் வாதிகளைப்போல் கீர்த்திக்கும், பெருமைக்கும் சுய நலத்திற்கும், குடும்ப வாழ்க்கைக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு தனது கொள்கைகளை மாற்றிக்கொண்டுமுஉள் ஒன்றும் புறமொன்றுமாகப் பேசியும், எழுதியும் காலங்கழிப்பவரல்ல. சரியோ தப்போ, தனது மனதிற்குபட்டதை ஒளிக்காமல் சொல்லும சுபாவம் கொண்டவர்— அவர் தனது அக்கிராசன பிரசங்கத்தில் கூறியிருக்கும் ஒற்றுமை, கதர், முதலிய சில முக்கிய விஷயங்களை மாத்திரம் பின்னால் குறிப்பிடுவோம்.

### சேலம் தியாகராய நிலயத்திற்கு ஓர் நன் கொடை.

தியாகராய நிலயத்தின் மேல் மாடியின் பூர்த்தி வேலைக்காக செவ்வாய்ப் பேட்டை பலசரக்கு மளிகை சாப்பு வர்த்தக கமிட்டியார் ரூ. 150—0—0ம் பலசரக்கு மளிகை மகா-ள-ள-ஸ்ரீ ஏ. எஸ். லட்சுமநரசிம்ம செட்டியார் அவர்கள் ரூபாய் 100—0—0 ஆக மொத்தம் ரூ. 250—0—0 நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கிறார்கள். வேலை துரிதமாக நடந்துகொண்டு வருகிறது. இரண்டாவது வருட உற்சவம் கூடிய சீக்கிரம் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் நடைபெறும்.

இப்படிக்கு
சி. ந. கணபதி பிள்ளை,
காரியதரிசி, தியாகராய நிலயம்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

### சுயமரியாதை உதயம்.

#### விதவா விவாகம்.

சேலம் டவுனில் ஸ்ரீமதி ருக்மணி அம்மாளுக்கும் ஸ்ரீமான் வெ. ராமசாமி நாயுடுவுக்கும் 7-2-27ல் விதவா விவாகம் நடந்தது.

#### கலப்பு மணம்.

தென் ஆப்பிரிக்காவில் ஸ்ரீமான் P. வெங்கிட்டராம நாயுடுவுக்கும் ரூபாய் (ரசபுத்திரர்) அம்மாளுக்கும் 6-2-27ல் பார்ப்பனரல்லாத புரோகிதரைக்கொண்டு விவாகம் நடந்தது.

#### பார்ப்பனரில்லாத விவாகம்.

மதுரை தில்லைநாயகபுரத்தில் ஸ்ரீமான் P. கேசவலு நாயுடுவுக்கு 23-1-27ல் நாயுடு புரோகிதரால் விவாகம் நடந்தது.

ஸ்ரீமான் சாமிநாதனுக்கும் ஸ்ரீமதி சிவகாமி சுந்தரிக்கும் 6-2-27ல் குடியாத்தத்தில பார்ப்பன புரோகிதரல்லாத விவாகம் நடந்தது.

ஸ்ரீமான் பொன்னப்ப நாடாருக்கும் கந்தம்மாளுக்கும் தங்கள் பந்துக்களிலேயே ஒருவரை புரோகிதராகக்கொண்டு 6-8-77ல் விருது நகரில் விவாகம் நடந்தது.

ஸ்ரீமதி மாயூரம் கமலாம்பாளுக்கும் பட்டுக்கோட்டை ஸ்ரீமான் சாம்பசிவநாயனுக்கும் 6-2-27ல் பழனியில் ஆண்டவர் சந்நிதியில் தேசிய புரோகிதரைக் கொண்டு திருமணம் நடந்தது.

மாயூரம் ஸ்ரீமான் எஸ். முத்தய்ய முதலியார் அவர்கள வீட்டில் நடந்த ஒரு சோபன முகூர்த்தத்தை கதர் கடை ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியார் அவர்கள் மந்திரம் சொல்லி நடத்திவைத்தார்.

#### ஓர் கும்பாபிஷேகம்.

கும்பகோணம் எருமைத் தோல் வட்டம் தெருவிலிருக்கும் ஸ்ரீ பழனி ஆண்டவன் கோவிலுக்கு திருப்பணி முதலானதுகள் செய்து 11—2—27 வெள்ளிக்கிழமையன்று பார்ப்பன குருக்களல்லாத உபாத்தியாயர்களைக் கொண்டு கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

#### முதல் மந்திரி.

முதல் மந்திரியான டாக்டர் சுப்பராயன் அவர்கள் திருக்காட்டுப்பள்ளி சர் சிவசாமி அய்யர் பள்ளிக்கூட வருஷாந்திர விழாவில் தலைமை வகித்தபோது ஆதிதிராவிடப் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடத்தில் சேர்க்காதது பற்றி வருந்துவதாகவும் பார்ப்பனரைப் படைத்த கடவுள் தான் ஆதித்திராவிடரையும் படைத்தார் என்றும் ஆதிதிராவிடருக்கும் மற்றவர்களைப்போல் சம உரிமைவழங்க வேண்டும் என்றும் சொன்னார்.

முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் சிதம்பரம் மீனாட்சி காலேஜின் பரிசளிப்புக் கொண்டாட்டத்தில் தலைமைவகித்தபோது மாணவர்கள் சாப்பாட்டு விடுதியில் ஜாதி வித்தியாசம் பாராட்டக்கூடாதென்றும் எல்லோரும் ஒரே இடத்தில் சேர்ந்து சாப்பிடவேண்டுமென்றும் பேசினார்.

(தமிழ்நாடுவிலிருந்து தொகுத்தது.)

# சுயமரியாதைக் கொண்டாட்டம்

பார்ப்பானை
சுவாமி என்ற காலமும் போச்சே!
லோகுரு என்ற காலமும் போச்சே!
காலில் விழும் காலமும் போச்சே!
காலைக்கழுவின தண்ணீரைக்குடித்து
மோக்ஷத்திற்கு போகும் காலமும் போச்சே!
நம் எல்லோரையும் "வைப்பாட்டி மக்கள்"
"சூத்திரர்கள்" என்னும் காலமும் போச்சே.!

காங்கிரஸ் தலைவர்:—துரைகளே! இது வகுப்புத் துவேஷமல்லவா?
துரை:—போரும் போரும் சட்ட மெம்பரையும் அட்வோகேட் ஜனரலையும் அபிப்பிராயம் கேட்போம். அவசரப்படாதேயும்.

## இன்னுமுமா பார்ப்பனப் பத்திரிகைகளை ஆதரிக்கிறீர்கள்?

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களது விஷங்களை பெரும்பாலும் பார்ப்பனப் பத்திரிகைகள் மூலமாகவே கக்கி பார்ப்பனரல்லாத மக்கள் அதுகளைப் படிப்பதாலேயே அவ்விஷம் ரத்தத்தில் ஊறிப்போகின்றது. இதை பல தடவைகள் சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறோம். இப்பொழுதும் நமது பார்ப்பனர்களின் பிழைப்புக்கான சகல ஆயுதங்களும் அதாவது தேசத்தின் பேரால் காங்கிரஸ் சுயராஜ்யம் எனனும் ஆயுதமும், மதத்தின் பேரால் மோக்ஷம் என்னும் ஆயுதமும் ஏறக்குறைய அடியோடு மழுங்கிப்போய் வருகிறதென்றே சொல்லலாம். காங்கிரஸ் சுயராஜ்யமென்பதன் மூலம் அல்லாது வயிறு வளர்க்க மார்க்கமில்லாத சில வயிற்றுச்சோற்று கூலிகள் தவிர மற்றவர்கள் இதை மதித்திருந்த காலம் மலையேறிப் போய்விட்டது அது போலவே மதத்தின் பேரால் அல்லது வாழமுடியாத—வெளியில் தலைகாட்ட முடியாத—சில பாஷாண்டிகள் தவிர மற்றவர்கள் பார்ப்பனர் மூலம் அடையும் மோட்சத்தை மதிக்கும் காலமும் மலையேறிப் போய்விட்டது. ஆகவே இதுசமயம் நமது பார்ப்பனர்களுக்கு மிஞ்சி இருப்பது அவர்கள் பத்திரிகை விஷப்பிரசாரந்தான். அதன் மூலம் அவர்கள் பிரசாரம் செய்யும் யோக்கியதையை இரண்டொரு உதாரணத்தால் எடுத்துக்காட்டுவோம்.

சென்ற வாரம் திருவண்ணாமலையில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலானவர்கள் பேசியதை பொதுஜனங்கள் ஆதரிக்கவில்லை என்றும் ஏதோ ஒரு சில ஆசாமிகள் மாத்திரம்தான் கேட்டதாகவும் வாத்தியமில்லாமலும் போலீஸ்காரர்கள் பந்தோபஸ்துடனும் வீடு சென்றதாகவும் அதே சமயத்தில் இதற்கு எதிரிடையாய் கூட்டப்பட்ட கூட்டத்தில பெருந்திரளான ஜனங்கள் வந்திருந்ததாகவும் அதில் நாயக்கர் முதலானவர்கள் பதில் சொல்ல முடியாத அநேக கேள்விகள் கேட்கப்பட்டதாகவும் நாயக்கர் வாயை மூடிக்கொண்டு போய்விட்டதாகவும் இன்னும் சில பொய்யுரைகளை முன்னுக்குப்பின் சம்மந்தமில்லாமல் உளறிக் கொட்டிவிட்டு கடைசியாக எழுதியிருப்பது என்னவென்றால் "ஞாயிற்றுக்கிழமை நடத்திய திராவிட கூட்டத்தில் சுயநலக்காரரான நாயக்கர் முதலானவர்கள் கக்கிய விஷப்புகை திருவண்ணாமலை நகர முழுதும் பரவி எங்கும் பிராமணத் துவேஷம், பிராமணத் தூற்றல், தேசியபத்திரிகை வெறுப்பு, காங்கிரஸ்மீது குறைகூறல், சுயராஜ்யக் கக்ஷியை வைதல், காங்கிரஸ் திட்டங்களை பரிகாசம் செய்தல் ஆலயஞ் செல்லல் வீண்செலவெனல் கடவுளுக்கும் திராவிடருக்கும் இடையில் பார்ப்பனத் தரகர் வேண்டாமெனல், அந்த மூட வழக்கத்தை ஒழிக்கவேண்டுமெனல், கண்டகண்ட விடங்களில் பார்ப்பனரைப் பரிகசித்தல், காங்கிரசை விட்டு திராவிடக் கூட்டத்தில் சேரவேண்டுமெனல் ஆகிய இதுபோன்ற விஷபங்களே நகர முழுதும் சிதறிநிற்கின்றன" என்று தனது நிருபர் பேரால் 11-2-27 தேதி தமிழ் சுயராஜ்யா பத்திரிகையில் குறிப்பிட்டிருப்பதாக ஒரு நண்பர் நமக்கு அனுப்பியிருக்கிறார். இது முன்னுக்குப்பின் எவ்வளவு முரணானதும் அயோக்கியத்தனமானதுமான பிரசாரம் என்பதை நேயர்கள் கவனிக்கவேண்டும். நாம் பேசிய கூட்டத்தில் யாரும் இல்லையென்றும் ஏதோ காங்கிரஸ் விரோதிகள் சிலபேர் இருந்தார்கள் என்றும் அதுவும் போலீஸ் பந்தோபஸ்துடன் நடந்ததென்றும் வாத்தியங்கூட இல்லாமல் வீட்டுக்கு போனதாகவும் எழுதிவிட்டு தாங்கள் போட்ட கூட்டத்தில் ஏராளமான ஜனங்கள் வந்திருந்ததாகவும் எழுதி இருக்கிறது. அப்படியானால் அவ்வளவு "ரகசியத்தில் கக்கிய விஷப்புகை" ஊர் முழுவதும் எப்படி பரவி மேல்கண்ட பலன்கள் ஏற்பட்டிருக்கும்? என்பதை வாசகர்கள்தான் உணரவேண்டும். இது தவிர சுதேசமித்திரனோ "நாயக்கர் தனது வாய் வலிக்குமட்டும் இரண்டரை மணி நேரம் 3 மணி நேரம் 5 மணி நேரம் பார்ப்பனர்களையும் புரோகிதர்களையும் வைதுபேசினார்" என்று எழுதுகிறதே அல்லாமல் என்ன பேசினார் என்பதை இச்சந்தர்ப்பங்களில் குறிப்பிடுகிறதேயில்லை. இன்னும் இதுபோல் மீட்டிங்கு போட்டதாகவும் கூட்டம் கூடினதாகவும் என்ன என்னமோ பேசினதாகவும் எழுதியிருக்கிறது. இதைப்பற்றி எத்தனையோ தடவை எழுதியிருக்கிறோம் பேசியுமிருக்கிறோம். கொஞ்சமாவது மானம் வெட்கம் சூடு சுரணை முதலியதுகள் இருக்குமானால் இனியும் 10 தலைமுறைக்கு இந்தக் கூட்டம் [illegible] இழிவான காரியங்களில் [illegible] தலையிடாது. அப்படிக்கு இல்லாமல் "தாயாரை பெண்டாட்டி ஆக்கிக்கொண்டாலும் நான் வந்ததானே சாகவேண்டும்" என்கிற ஆர்த்த வாக்கியத்தை தனக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டு" நாம என்னதான் எழுதினாலும் நம்மை யார் என்ன செய்யக்கூடும்" என்கிற தைரியத்தில் எல்லாவற்றையும் மறந்து இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறதுகள்.

இவைகளுக்கு இனி நாம் மறுப்பு எழுதுவதாலோ அல்லது கண்டிப்பதாலோ ஒருக்காலும் புத்தி வரும்படி செய்ய முடியவே முடியாது. மானமுள்ள ஆயிரம் பேரையும் ஒருவன் எதிர்த்து போர்புரிய முடியும். மானமில்லாத ஒருவனை வெல்ல ஆயிரம் பேராலும் ஆகாது என்கிற முது மொழிப்படி மானம், ஈனம், தைரியமற்ற கூட்டத்தை நாம் எப்படி சமாளிக்க முடியும் என்று பார்ப்போமேயானால் அம்மாதிரி பத்திரிகைகளை பார்க்காமலிருப்பதனால்தானே ஒழியமற்றபடி இதற்கு வேறுமார்க்கமில்லையென்று தான் நாம் சொல்லுவோம். இதையே பல தடவைகள் சொல்லியுமிருக்கின்றோம். அநேக ஜனங்கள் அப்பத்திரிகைகளுக்கு புத்தி வரும்படி செய்தவற்காக அதைப் பஹிஷ்கரித்திருப்பதாய் நமக்கு எழுதியும் வருகிறார்கள், ஆனபோதிலும் அது தகுந்த பலனை அளிக்கவில்லை என்றே தோன்றுகிறது.

ஆகலால் இனியாவது இவ்வித பத்திரிகை களை ஆதரிப்பதன் மூலம் நமது சமூகத்திற்கு கேடுவருவித்துக்கொள்ளக்கூடாதென்பதை தெரிவித்துக்கொள்வதோடு இவ்வித ப்புரட்டுகளையும் விஷப்பிரசாரத்தையும் ஒழித்து மக்களுக்கு உண்மையை விளக்கி சுயமரியாதையை உண்டாக்கவென்றே பாடுபட்டுவரும் "திராவிடனையே" ஒவ்வொரு தமிழ் ! மக்களும் ஆதரிக்கவேண்டுமென்று வேண்டுகிறோம்.

---

கும்பகோண வாசகசாலை

---

எமது அன்பார்ந்த கனவான்களே!

1928 ஞு அக்டோபர் மீ 19-ந் தேதியன்று விஸ்வகர்ம வகுப்பினர்களால்சத்திய சன்மார்க்க சமரச பரஸ்பர நோக்கத்தோடு ஸ்ரீகமாட்சி விலாசவாசக சாலையென்னும் திருநாமத்துடன் கும்பகோணத்தில் இச்சங்கத்தை ஸ்தாபிக்கப்பெற்று, ஐக்கிய பான்மையை விர்த்தி செய்து நாகரிக முறையில் ஜாதி பேதமின்று உழைத்து வருகிறது. இச்சங்கம் சாஸ்வத நிலையை அடைந்து உன்னத நிலையையடைய பெரியோர்களின் போஷிப்பும், ஆதரவும், ஆசிர்வாதமும் இன்றியமையாததாகும். இச்சங்கம நீடூழ்காலம் சொழித்தோங்க ஓர் இல்லம் அத்தியாவசியமென சங்கத்தார் அபிப்பிராயப்பட்டு வாசகசாலை கட்டட பண்டு தர்மம் டிகட்டுரு1 ஒன்று விதம் 1000 (ஆயிரம்) டிக்கட் தயார் செய்து புஸ்தகம் ஒன்றுக்கு 25 விதம் வெளியிடப்பட்டிருக்கிறது. எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இச் சாஸ்வத தர்ம கைங்கரியத்தையேற்று இட் டிகட்டைப்பெற்றுக்கொண்டு தங்கள் நண்பர்களுக்கு சிபார்சு செய்து வித்து பொருளை நிலைய நிதிக்கு அன்புடன் சேர்ப்பிக்கவேண்டுமாய் மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். சென்னை டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் இரண்டு புஸ்தகமும், (டிக்கட்டுகள்50) தஞ்சை கோபால்சாமி பத்தரவர்கள் ஒருபுஸ்தகமும் (25டிக்கட்டுகள்) பாபவிநாசம் கணபதி பத்தரவர்கள் ஒரு புஸ்தகமும் இன்னும் உள்ளூரில் அநேக கனவான்கள்டிக்கட்டு விற்றுகொடுப்பதாக அன்புடன் வாக்களித்து புஸ்தகம் பெற்றிருக்கிறார்கள். இனைக் கண்ணுறும் கனவான்கள் காரியதரிசிக்கெழுதி புஸ்தகம் பெற்று கூடிய சீக்கிரம் டிக்கட்டு விற்பனை செய்து அனுப்பிவைக்கவேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதுவரை பொருள் ஈந்த கனவான்கள்.

கும்பகோணம் [illegible]

அவர்கள் (டிக்கட்டுகள்) ரூ. 5-0-0

" ஆர் [illegible] அவர்கள் ரூ 5-0-0

" ஆர். அய்யாவய்யா

அவர்கள் ரூ 1-0.0

" ராயா இராஜகோபால

பாகவதர் அவர்கள் ரூ 1-0-0

" பி. ஆத்மநாத பத்தர்

அவர்கள் ரூ 1-0-0

காரியதரிசி நாகராஜன் எழுதுகிறார்.

---

## நமது நன்றியறிதல்.

அடியிற்கண்ட கனவான்களை சிங்கப்பூர் ஸ்ரீமான்கள்

கோபால், ராஜகோபால், சுப்பய்யா, கோவிந்தசாமி, வெங்கடாசலபதி, சாரங்கபாணி

ஆகிய ஆறுகனவான்களின் பெருமுயற்சியால் நமது பத்திரிகைக்கு சந்தா நேயர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

---

*Messrs:—*

1 S. Gopal
2 A. S. Veerappa Reddiar
3 P. M. Bava Maricar & Co.,
4 G. Sarangapani
5 K. Venkatasalapathi
6 G. Ratanasabapathi
7 V. Sreenivasalu
8 R. S. Rajan & Co.,
9 R. D. Govindaswami
10 P. Swaminatha Chettiar
11 M. Vairakannu
12 G. Shunmugam
13 O. Ramasami Nadar & Co.,
14 S. Ganapathi
15 T. P. L. Manikam Chettiar
16 PR. M. P. Natesan Chettiar
17 A. Syed Mohamed Maricar
18 O. Ramasami
19 L. Govindaraja
20 N. Ramaswami Pillai
21 G. Gopalsami
22 N. N. Govindaswami Thevar
23 D. Krishnaswami
24 M. Naina Padayachy
25 A. M. V. Ramalingam Chetty & Co.,
26 E. A. Batcha Sahib
27 K. Mohamed Abdul kader
28 K. Mohamedali Maricar & Co.,
29 AK. V. Abduljabaar Maricar
30 S. Ratnam Pillai
31 KR S. Somasundaram Chettiar
32 S. R. Raya pathar
33 PL. K. N. Ramasami Chettiar
34 RM. S. Shunmugam Chettiar
35 PR. NK. PR. Velayuthan Chettiar
36 S. S. T. Palaniappa Chettiar
37 AL. AT. Athappa Pillai
38 A. Mohamed Ibrahim Rowther
39 T. Dharmalingam
40 KR. S. SP. Suppiah Chettiar
41 V. P. Rajah
42 T. K. T. Kuppusami Mudaliar
43 M. A. N. Arunachala Mudaliar
44 A. D. P. Arunachala Chettiar
45 V. M. Murugappa Mudaliar
46 Perianna Pillai
47 A. N. D. Arumuga Mudaliar
48 V A R Rajamanikam Chettiar
49 M. S. Munuswami Chettiar
50 M. Mohamed Eusoof
51 A. C. Suppiah
52 R. Muthia Servai
53 M. S. Murugasem Pillai
54 R.M.VR. Ramaswami Chettiar
55 M. K. Karuppiah Thevar
56 P. K. S. Naikar
57 S. Kuppusami Thevar
58 PL. AL. K. Natarajan Chettiar
59 S.M.P.A.R. Natarajar Chetiarr
60 L. A. M. Muthurama Chettiar
61 S. Munuswami
62 K. Malaperumal
63 VR. V. Chidambaram Chettiar
64 N. Kasturi
65 T. Somasundaram
66 S. Somasundaram
67 P. A. Noor Mohamed
68 K. Mohamed Maideen
69 T.S.T.S. Subramaniya Chettiar
70 SP. K. Vayravan Chettiar
71 A.N. Chockalingam Chettiar
72 A. Ponnu
73 Aranswami
74 B. Rajagopal Naidu

குறிப்பு:—மேல்கண்ட 74 கனவான்களும் சந்தாதாரர்களாக சேர்ந்திருப்பதோடு நமது கொள்கைகளையும் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு மேலும் மேலும் நமக்கு ஊக்கமளித்திருப்பதற்கும் குடி அரசை பரப்ப இனியும் முயர்ச்சி எடுத்துக் கொண்டிருப்பதாய் அன்புடன் தெரிவித்திருப்பதற்கும் தமிழ் மக்களின் சுயமரியாதையின் பொருட்டு நாம் தமிழ் மக்கள் சார்பாகவும் நமது சார்பாகவும் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

[ப—ர்.]

---

### மதுரை மருத்துவசங்கம்.

12-2-27 தேதி மதுரையில் திரு. நாகபூஷணம் அவர்கள் தலைமையில் கூடி திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலூகா முடித்தானேந்தல் புதூரில் மருத்துவர்களின் புஞ்சைப்பயிர்களில் சில கொடுமைக்காரர்கள் ஆடுமாடுகளை விட்டு மேய்த்து நாசமாக்கி கஷ்டப்படுத்தியதின் விஷயமாய் ஸ்ரீமான்கள் எஸ். எஸ். சுப்பய்யா பிள்ளையும் தர்மலிங்கம் நம்பியும் பேசியதோடு ஸ்ரீமான்கள் பண்டிதசுந்திர மூர்த்தி, ராமசாமி தாஸ், எஸ். சுப்பய்யா பிள்ளை ஆகியவர்கள் இது விஷயத்தில் தங்கள் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள் என்று மீனாக்ஷிசுந்திரம் எழுதுகிறார்.

---

## சுயமரியாதையே மக்கள் பிறப்புரிமை.

சுயமரியாதை இல்லாத சுயராஜ்யம் சுயநலக்காரரின் வயிற்றுச் சோற்று உரிமை.

## சுகாதார வாரம்.

இந்நாட்டில் செய்யப்படும் பல காரியங்களும், சடங்குகள் என்ற முறையில் செய்யப்படுகின்றனவேயன்றி, நன்மையும், க்ஷேமத்தையையும் உத்தேசித்தன்று. கல்யாணம், மக்களுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான சடங்காகும். ஆனால் அதை நடத்தும் முறையை கவனிக்கும்போது, அர்த்தமற்றதாய், பொருப்பற்றதாய், விளையாட்டாயிருக்கிறதே ஒழிய, அதன் தத்துவங்களை அறிந்து நடப்பதாயில்லை. உதாரணமாக, அகலிகை, அருந்ததியின் சரித்திரத்தை மணமக்களுக்கு சொல்லி, அதன் தத்துவத்தையும், அவர்களுக்கு ஊட்டுவதற்கு பதிலாக, பெருங்கூழப்பத்திற்கு மத்தியில் பெண்ணைக்கூப்பிட்டு, அம்மியை மிரி, அம்மியை மிரி என்று பலர் கூறுவதும், ஆச்சி, ஆச்சிப்பந்தலுக்குள்ளிருந்தபடியே-ஆகாசத்தைப் பார், பார், என்று சிலர் கூறுவதும், சரி சடங்கு தீர்ந்தது, தீர்ந்தது என்று எல்லோரும் உட்காருவதுமாயிருக்கிறார்கள். இல்லறம், மனைவியின் கடமை, இன்னதென்பதை அறியாது, அச்சிறு பாவிகைக்கு இந்தச் சடங்கினால் என்ன பிரயோஜனம், இதைப்போலவே, நம் சுகாதார வாரக்கொண்டாட்டங்கள் நடைபெருகின்றன.

ஏதோ அரசாங்கத்தில் உள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆரம்பித்தார்கள் என்றும், அவர்களை திருப்தி செய்யவேண்டுமென்றும், ஏதோ நாமும் சுகாதாரவாரம் நடத்தினோம் என்று பத்திரிகையில் வந்தால் போருமென்றும், இத்தகைய காரியங்களை நடத்தினால் பயனில்லை. சுகாதார வாரமென்றால் என்ன? எதற்காக அதை நடத்தவேண்டும்? ஊரிலுள்ள பஞ்சத்தை கவனியாது, பாடுபட்டு சம்பாதித்த பொருளை, டமாத்தமாக வருவிப்பதுதானா, சுகாதாரம்? அப்பணத்தால் ஏதோ ஒரு கட்டடத்தில் சில பொம்மையில் பல எழுத்துக்களும் அடங்கிய சுவரொட்டித்தாள்களை சுவரெல்லாம் ஒட்டுவதும், விளையாட்டுக்கருவிகளைப் போன்ற சில சாமான்களை அழகாய் மேஜையின் பேரில வைப்பதுந்தானா சுகாதாரம்.

இதனால் ஆங்காங்கு இதை நடத்திவைக்கும் ஸ்தலஸ்தாபனத்தின பேரில் குறைகூறவில்லை. ஆட்டுவித்தால் ஆடுகிறார்கள். ஆனால் இதில் தலையிட்டுக்கொள்ளாது, அதற்கென வசூலித்த பணத்தை நல்லமுறையில் செலவிட்டிருந்தால், நலமாயிருந்திருக்கும். சும்மாயிருப்பதற்கு இது போராதா? இதுவும் இல்லாமற்போவதற்குத்தான் இக்குதர்க்கங்கள் என்று ஒரு சாரார் சொல்லவருவார்கள். கல்யாணத்தில் அம்மி மிதிக்கும் சடங்கைப்போல் நடத்துவதைக்காட்டிலும் அதை நடத்தாமலிருப்பது நலமாகும். சடங்கென இதை நடத்துவதால், அரசாங்கத்தின் கடமையும், தீர்ந்துவிடுகிறது. தேசசுகாதார சம்மந்தமாய், அரசாங்கம் என்னசெய்தது என்று கேள்விவரும்போது, அம்மிமிதித்த சடங்கைப்போல், ஆங்காங்கு நடத்திய இச்சுகாதார வாரக்கொண்டாட்ட விஷயத்தை பிரமாதமாக இரண்டு முழம் எழுதிப்படித்துவிடுவார்கள்- உண்மையில் இதனால் நாட்டிற்கேனும், ஏழைமக்களுக்கேனும் நன்மையுண்டா?

நாட்டின் சுகாதாரம் எங்கிருக்கிறது? அரசாங்கத்தின் கையிலும் ஸ்தலஸ்தாபனங்களின் கையிலும் இருக்கிறது. அந்தோ! ஸ்தலஸ்தாபனங்கள் என்ன செய்யும். வெறுங்கையில் முழம்போட்டு வருகிறார்கள். சீர்திருத்தங்களுக்கு வேண்டிய பணம் கையில் இருப்பதில்லை. மேற்கொண்டு வசூலிக்கவும் ஏழைகளின் நிலைமை இடங்கொடுப்பதில்லை. அரைககாசு கல்யாணம், அதில் கொஞ்சம் பாணவேடிக்கை என்றால் முடியுமா? இதற்கெல்லாம் பணம் வேண்டுமென்று அரசாங்கத்தாரிடம் கேட்டால், அவர்கள் கையை விரித்துவிடுவார்கள். அதோடல்லாமல் இது சரியாயில்லை, அது சரியாயில்லை என்று குற்றம் காட்டவும்வந்துவிடுகிறார்கள். பரிதாபம் ஸ்தலஸ்தாபனங்கள் என்ன செய்யும்? மத்தளங்களைப்போல் இருபக்கமும் அடிபடுகின்றன. இந்த நிலைமையில் சுகாதாரக்கூழிகள் வேறு வேண்டியிருக்கிறது.

இந்நாட்டில் சுகாதாரம் விருத்தி அடையவேண்டுமானால், இவ்விஷயத்தில் அரசாங்கத்திற்கு பொருப்பு ஏற்படவேண்டும். ராணுவத்திற்கும உயர்தர உத்தியோகஸ்தர்களுக்குமாய் செலவிடும் பெருந்தொகையான பணத்தின் ஒரு பாகத்தையேனும் மக்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாகிய சுகாதார சீர்திருத்தத்திற்கு உபயோகப்படுத்தினால் சுகாதாரம் எவ்வளவோ முன்னடையும். ஆனால் அரசாங்கம் க்ஷேமமாயிருக்க ராணுவமும், உயர்தர உத்தியோகஸ்தர்களும் நன்கு கவனிக்கப்படவேண்டுமென்று நினைக்கும்போது சுகாதாரத்தில் கவனம் எங்கிருந்து உண்டாகும்- [illegible] முக்கியமானது மற்றொன்று இருக்கிறது. அதாவது மக்களுடைய வறுமைப்பிணியை நீக்கினால் சுகாதாரம் ஸ்திரமாய் முன்னடையும் நீர் வியாதிக்குத் தக்கபரிகாரம் தேடாது, அவ்வியாதியஸ்தன் புண்ணுக்கு எவ்வளவு சிறந்தமருந்தும், எவ்வாறு பயன்படாமற்போகிறதோ, அதுபடியே நாட்டின் வறுமைக்கு பரிகாரம் தேடாதவரையில், சுகாதாரம் விருத்திசெய்யும் முறைகள் எல்லாம் பயனற்றதாகவே முடியும். "பசிவந்தால் பத்தும் பறந்துபோகும்" என்பது பசியால் வாட்டமுற்றவர்களுக்குத்தான் தெரியும், புளியேப்பக்காரர்களுக்குத்தான். இதில் உப்பு இல்லை, புளி இல்லை என்பதும், காற்றோட்டமில்லை, படுக்கை மெதுவாயில்லை என்பதெல்லாம். நம் நாட்டில் பெரும்பான்மை 100-க்கு 90 பேர்கள் கூலிகளாகவும், சாப்பாட்டிற்கே போதாத சொற்பசம்பளக்காரர்களாகவுமிருக்கிறார்கள். இவர்கள் பாவம் இரவும் பகலுமாய் கஷ்டப்பட்டால் அன்றி வயிற்றுக்காலக்ஷேமம் நடத்துவது கஷ்டமாகமுடியும். அதைவிட்டு மற்ற சுகாதாரங்களை கவனிக்கவேண்டுமென்றால், வயிற்றுக்கு ஈரத்துணி போட்டுக்கொள்ள வேண்டியதுதான். இந்நிலைமையில் உள்ளவர்களிடம் சுகாதாரபிரசாரமும். உபதேசமும், எவ்வளவு செய்தாலும் என்னபிரயோஜனம் நோயறிந்து, வைத்தியம செய்வதன்றே, வைத்தியன்புத்தி நுட்பத்தைக்காட்டும் ஆகவே, சுகாதார முன்னேற்றத்திற்கு பாதகமாயுள்ள வறுமையையும், வறுமைக்குக்காரணமாயுள்ள குடியையும் அகற்றினால்; சுகாதாரம் தானாகவே முன்னடையும். அதைவிட்டு நீர் ரோகஸ்தன் புண்ணுக்கு மேல் சிகிச்சை செய்தாற்போல், சுகாதாரவாரக் கொண்டாட்டத்தால் சுகாதாரத்தை விருத்தி செய்ய முடியாது.

இதில் செலவிடும் தொகையையும் பிரபலஸ்தர்களின் ஊக்கத்தையும், ஏழைகளை அடிமைப்படுத்திக்கொண்டிருக்கும், "குடியை" அகற்றசெலவிட்டிருந்தால் நலமாயிருந்திருக்கும், முடிவாக சுகாதாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற உண்மையான எண்ணம் நம் ஸ்தலஸ்தாபனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இருக்குமேயானால் அதற்கு வேறுகாரணமாயிருக்கும், வறுமையையும் அதற்குக்காரணமாயிருக்கும் குடியையும், அறவே விலக்கி-ஏழை மக்களுடைய வருமானத்தை உயர்த்த, சுதேச கைத்தொழிலை அபிவிருத்தி செய்து, அதற்கு பாதகமாயிருக்கும் பிரதேச சாமான்களை பகிஷ்காரம் செய்ய ஒவ்வொருவரும முயலவேண்டும்.

வை. நடேசன்.

## சென்னை பச்சையப்பன் ஹாஸ்டலில் பார்ப்பனரல்லாத மாணவருக்கு பார்ப்பனரல்லாதார் சமையல்.

சென்னையிலுள்ள ஹாஸ்டல்களில் (மாணவர் விடுதிகள்) சேத்துப்பட்டிலுள்ள பச்சையப்பன் விடுதி மிகவும் முக்கியமானது. இங்கே சுமார் 220 மாணவர்கள் இருந்து வருகிறார்கள். சில ஆண்டுகளாக இந்த விடுதியில் 5 சமையல்கள் நடந்து வருகின்றன. பிராமணர்களுக்கு— 1; மலையாள பிராமணர், பிரமணரல்லாதாருக்கு—2; ஆந்திர பிராமணர் பிராமணரல்லாதாருக்கு— 3; தமிழ் ஜில்லாக்கள் பார்ப்பனரல்லாதாருக்கு—4; மாமிசம் சாப்பிடக்கூடிய எல்லாருக்கும்—5. கடைசியாக கூறிய சமையல் தவிர்த்து பாக்கி எல்லாவற்றிற்கும் பார்ப்பன தவசி பிள்ளைகளே நாளதுவரை இருந்து வந்தார்கள். ஆனால் சில காலமாக தமிழ் ஜில்லாக்கள் பார்ப்பனல்லாதாருக்குள் தங்கள் வகுப்பிற்கு பார்ப்பனரல்லாத சமையல்காரர்களைக்கொண்டே சமையல் செய்யவேண்டுமென்று தீவிர எண்ணம் தின்று, நிலவிவந்தது, இதனை அமுலுக்குக்கொண்டுவர ஒரு தகுந்த சமயம் வாய்த்தது.

சில நாட்களுக்கு முன்னர் பாப்பனரல்லாத ஒருவர் பார்ப்பன நண்பர் ஒருவரை தமது வகுப்பிற்குக் கூட்டிக்கொண்டு வந்து சிற்றுண்டி கொடுத்தார். அப்பொழுதே சில பாப்பனரல்லாதநண்பர்கள் கூட்டிக்கொண்டு வந்த சகோதரருக்கு எச்சரிக்கை செய்தார்கள். அதாவது தாராளமாக ஒரு பார்ப்பனர் நம் கூட சாப்பிட நாம் அனுமதிக்கும்போது, நாம் பார்ப்பனர் வகுப்புக்குச்சென்றால் துரத்தி விடுவார்கள் என்று சொன்னார்கள். அதேமாதிரியாகவே அன்று நடந்தது. இந்த பார்ப்பனரல்லாத மெம்பர் அந்த பார்ப்பன மெம்பர் வகுப்பிற்குச் சென்றார். உடனே அங்கிருந்தவர்கள் அருவருப்போடு எழுந்து போய்விட்டதோடு சமையல்காரனையும்சிற்றுண்டிவழங்கக்கூடாதென்று உத்தரவு செய்தார்களாம்.

பார்ப்பனரல்லாத [illegible] வெட்கி வெளியே வரவேண்டியதாயிற்று. [illegible] மற்ற நண்பர்களுக்கு புண்ணில் கனல் சொரிந்தாற்போல் இரும்புக்கோல்சொருகியதுபோல் ஆத்திரமுண்டாயிற்று இந்தசம்பவம் நடந்த இரண்டொருதினத்திற்குள் பார்ப்பனரல்லாத வகுப்பிற்குப் பார்ப்பன தவசிபிள்ளைகளைத் தள்ளி விட்டு, பார்ப்பனரல்லாத சமையல்காரர்களையே வைத்துக்கொண்டார்கள் இதன் மகிழ்ச்சியைகொண்டாட அண்மையில் ஒரு விருந்தும் நடந்தது. இதே மாதிரி மற்ற ஹாஸ்டல்களிலும் பார்ப்பனரல்லாத சமையல்காரர்களை வைக்க ஏற்பாடு செய்யக்கோருகிறேன்

தமிழ்த்தொண்டன்.

குறிப்பு:—

பச்சையப்பன் ஹாஸ்டல் மாணவர்களுக்கு நாளுக்கு உதயமாகாமல் பார்ப்பனர்கள் பந்தியில் அவமானம் செய்த பிறகாவது சுயமரியாதை உணர்ச்சி உதயமானதற்கு மிகவும் ஆனந்தமடைகிறோம். மற்ற ஹாஸ்டல் மாணவர்களுக்கும் இன்னும் எந்தெந்த வகையில் அவமானப்பட்ட பிறகு இவ்வுணர்ச்சி உதயமாகுமோ வென்பது அறியக்கூடவில்லை. [ப—ர்]

## திருவண்ணாமலை கோவில் கடைப்பு.

திருவண்ணாமலை கோவிலுக்குள் ஸ்ரீமான் கண்ணப்பரை போகவிடாமல் பட்டர்களும் ஸ்தானிகர்களும் கதவடைத்த விஷயமாய் பல கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை கோர்ட்டில் பிராது நடந்துகொண்டிருக்கும்போது பிரசுரிப்பது கூடாதென்பதாகக் கருதி பிரசுரிக்காததற்கு நேயர்கள் பொருப்பார்களாக.

## மதுரை சுயமரியாதைத் தீர்மானம்.

அக்ஷய ஆண்டு, தைத் திங்கள், 19ம் நாள் திருமங்கலம் தாலுகா தூம்பக்குளம் கிராமத்தில் திருவாளர் அப்பாவு முதலியார் என்ற நமசிவாய முதலியார் அவர்களின் தாயாரான, காலஞ் சென்ற சங்கமித்தத் தம்மாளின் ஞாபகார்த்த தினமாகிய 16ம் நாள் கூடிய தொண்ட மண்டல முதன்மை வேளாளர் சைவத்திருக் கூட்டத்தில் இதன் அடியிற் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

**தீர்மானங்கள்.**

(1) இறந்தவர்களுக்குத் தகனமும், மறுநாள் அக்கு சுத்தியும் செய்வதைத் தவிர வேறு யாதொரு கிரியையும் செய்ய வேண்டியதில்லை; செய்யவுங் கூடாது.

(2) இறந்தவர்களின் அநுதாப ஞாபகார்த்தமாகப் பத்தாம நாளிலும் (அல்லது குறிப்பிட்ட வேறு அதனினுமேற்பட்டவோர் தினத்திலும்,) வருட முடிவிலும், (ஒவ்வோராண்டு பூர்த்தியிலும்) அவரவர் தெய்வ வழிபாட்டுடன் தத்தம் சக்திக்கேற்றவாறு பந்துமித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், (அடியார்களுக்கும்) அன்னமளித்து அன்பு செலுத்தலாம். (இதனால் மனத்திருப்தியும், தர்மார்த்த எண்ணமும் உதிக்கலாமே யன்றி வேறு எப்பயனும் உண்டாவதில்லையென்பது உண்மையேயாமென்பது தமிழ் மறை முடிபாம்)

(3 மேற்கண்ட தீர்மானங்களை ஒப்புக் கொண்டு இதன்படி நடந்து வருவதாயிதனடியில் கையெழுத்து வைப்பதின் மூலம் பரிபூரணமாய் அவரவர் சம்மதம் (செய்வதெனவும்) அறிவிக்கவேண்டுமென்றும் ஏகமனதாய் சபையோராலிந்த தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சபையின் முன்னுல் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டவர்கள்.**

* M K முத்துக்காமாட்சியப்ப முதலியார், * 2 M T சோமசுந்தர முதலியார் (மதுரை) * 3 K கல்யாணசுந்தர முதலியார் (திருமங்கலம்) 4 A K ஆனையப்ப முதலியார், 5 A அருணாசல முதலியார் (அன்னஞ்சி) 6 முத்துக்குமாரசாமி முதலியார் கர்ணம் ஆசம்பட்டி) 7 G நாகப்ப முதலியார் திருநகரங்கோணி) 8 ஆவுடையப்ப முதலியார் (ஆசம்பட்டி) 9 சீனிவாச முதலியார் (ஆசம்பட்டி) 10 முத்துசாமி முதலியார் T L M 11 முத்துக்குமாரசாமி முதலியார், (பொன்மேனி) 12 A முத்துசாமி முதலியார் (சோலைக்குறிச்சி) 13 R தியாகராய முதலியார் (சோழவந்தான்) 14 M கண்ணப்ப முதலியார் (சோலைக்குறிச்சி) 15 சங்கரசுப்பிரமணிய முதலியார் (சோழவந்தான்) 16 இராமசாமி முதலியார் (கள்ளிக்குடி V M) 17 இராமலிங்கம் பிள்ளை (கள்ளிக்குடி கர்ணம்) * 18 M நடராயசுந்தர முதலியார் (மைக்குடி கர்ணம்) * 19 பூசைமுதலியார் (திருமங்கலம்) 20 சக்கரையப்பமுதலியார் (ஆசம்பட்டி) P குழந்தைவேல்முதலியார் (திருமங்கலம்) A சிவானந்த பிள்ளை (தூம்பக்குளம்) 23 ராமையா முதலியார் (Taluk clerk Tirumangalam) 24 வேதமூர்த்தி முதலியார் (மதுரை) 25 கிருஷ்ண பிள்ளை (அச்சாபீசு திருமங்கலம்) 26 A சண்முக வடிவேல் முதலியார் (குலமங்கலம் V M) 27 A நமசிவாய முதலியார் (தூம்பக்குளம்) * 28 A (அ) பழனிவேலு முதலியார் (அரும்பனூர்) 29 காளியப்பபிள்ளை ஓட்டல் மதுரை) 30 M கருப்பையா முதலியார் (தூம்பக்குளம்) 31 சொக்கலிங்கமுதலியார் (கிடாத்திருக்குளம்) 32 அ முத்துக்குமாரசாமி பிள்ளை தூம்பக்குளம்) 33 கந்தசாமி முதலியார் (கள்ளிக்குடி) 34 சங்கரமூர்த்தி முதலியார் (பந்தல்குடி) 35 A சிதம்பர முதலியார் (தூம்பக்குளம்) 36 * தே. தி. க. மு. நித்தியானந்தமடிகள் (பொதுமக்கள் ஊழியம் திருமங்கலம்)

**பின்னர் சம்மதித்தவர்கள்.**

37 மாரியப்ப முதலியார் (திருமங்கலம்) இவர் சென்ற தை மாதம் 22-ந் தேதி மேற்குறித்தவாறு தகப்பனருக்குக்கருமம் ஆற்றினர்) 38 T N வேணுகோபால முதலியார் (திருமங்கலம்) 39 * வி சண்முகசுந்தர முதலியார் (திருமங்கலம்) 40 இராமகிருஷ்ணபிள்ளை (பஞ்சு வியாபாரம் (திருமங்கலம்)

**சங்கஉபதலைவர்**

(ஒ-ம்) M K முத்துக்காமாக்ஷியப்பமுதலியார் தங்கள் ஊழியன், நித்தியானந்தமடிகள்,

குறிப்பு:— * இந்த அடையாளமிட்டவர்கள் தங்கள் வேறு சகலகிரியைகளிலும் அடியுடன் பிராமணியத்தைஒழித்தவராவார்கள்

---

## செங்குந்த முதலியார் மகாஜன சபை.

இச்சபையின் ஆதரவின்கீழ் 13-2-27 மாலை 5-30-மணிக்கு சிக்கல் உயர்திருவாளர் சொ. ச. கந்தசாமி முதலியாரவர்கள் தலைமையின்கீழ் ஓர் கூட்டம் நடைபெற்றது.

தலைவரவர்கள் சமூக முன்னேற்றத்தைப் பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்திய பின் நாகை திராவிட வாலிப சங்கத்திற்கு சமீபத்தில் விஜயம் செய்யும் ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களையும் தஞ்சை ஜில்லா போர்டு பிரசிடெண்டு உயர்திரு பனனீர்செல்வம் அவர்களையும் உயர்திரு உமாமகேஸ்வரம் பிள்ளை அவர்களையும் நெடும்பலம் உயர்திரு சாமியப்ப முதலியாரவர்களையும் மற்ற பிரமுகர்களையும் நமது சபைக்கு வரவழைத்து நாம் நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி அறிவுறுத்துமாறு செய்யவேண்டியதென தீர்மானம் தலைவரவர்களால் கொண்டுவர திரு வே. மாணிக்க முதலியாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று இனிது கலைந்தது என ஷை சபைக் காரியதரிசி அறிவிக்கிறார்.

## பட்டுக்கோட்டை.

ஞாயிற்றுக் கிழமை மாலையில் நாடியப்பன் மண்டபப்படியில் சுயமரியாதைச்சங்கத் தினுதரவில் ஸ்ரீமான் அழகர்சாமி நாயுடுகாரு அக்கிராசனத்தின் கீழ் திருச்சி ஸ்ரீமான் உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை அவர்கள் சுய ஆட்சியும் சுயமரியாதையும் என்றும் பொருள்பற்றி ஒரு அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினர் என "தமிழன்" எழுதுகிறார்.

## மதிப்புரை.

### கர்ணன்.

அறந்தாங்கி தாலூக்கா கோலேந்திரம் போர்ட் எலிமெண்டரி ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் வி. ரத்தினம் அவர்களால் அனுப்பப்பட்டகர்ணன் என்னும் சிறு புத்தகம் நமது பார்வைக்கு வந்தது அது மிகவும் தெளிவான பாஷையில் பெரிய எழுத்தில் முதலாவது இரண்டாவது வகுப்பு பிள்ளைகளுக்கும் புரியும்படியாக கர்ணன் பிறப்பு முதல் இறப்புவரை உள்ள விஷயங்களைச்சுருக்கி அவனது ஈகையும் வீரமும் ததும்பும்படியாகவும் படிப்போர் மனதைக்கவரும்படியாகவும் எழுதி இருக்கிறார். நல்ல காகிதம், நல்ல அச்சு, 16 பக்கம் கொண்ட சிறு புத்தகம் விலை அணா ஒன்று தான். வேண்டியவர்கள் ஷை விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

### பிஸ்கோத்து.

மதுரைஜில்லா உசிலம்பட்டி பெரி கம்பெனியாரால் செய்யப்பட்ட பிஸ்கோத்து தினுசுகள் அடங்கிய ஒரு சிறு மாதிரி பெட்டி நமது பார்வைக்கு வந்தது. அது பார்வைக்கு அழகாகவும் உண்பதற்கு ருசியாகவும் மேல் நாட்டு முறைப்படி தகரடின் பெட்டிகளில் பாக்செய்து இருக்கிறதும் தவிர சில ஆங்கில கனவான்களால் பெற்ற நற்சாக்ஷி பத்திரங்களும் கூட அனுப்பப்பட்டிருக்கிறது. ஆதலால் சுதேசியத்தில் பற்றுக்கொண்டவர்கள் இப்பிஸ்கோத்தை ஆதரிக்கவேண்டியது.

---


இனம்! இனம்!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனம்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனு இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.


---

## குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.

## சீர்காழியில் பச்சையப்ப முதலியார் தர்மம்

நமது நாட்டில் காலம் சென்ற சென்னை பச்சையப்ப முதலியார் எல்லோரும் புண்ணியவான் பல புண்ணிய க்ஷேத்திரங்களிலும் நமது பிள்ளைகள் படிக்கப் பள்ளிக்கூடங்களும், கோவில்களில் கட்டளைகளும் ஏற்படுத்தி சுவாமிக்கு நிவேதியம் செய்து பிரசாதத்தை ஏழைகளுக்குக் கொடுத்து பசியாற்றவும் தர்மங்கள் ஏற்படுத்தியிருப்பது யாவரும் அறிந்ததே. அதில் சிதம்பரம், காஞ்சிபுரம், சென்னை முதலிய இடங்களில் நடந்துவரும் உயர்தர பாடசாலைகள் முக்கியமானவைகள். சீர்காழி, சிதம்பரம், காஞ்சிபுரம், திருவெற்றியூர் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் கட்டளை தர்மங்களும் நடந்துவருகிறது. இதற்கு தர்மகர்த்தர்கள் சென்னையிலிருந்து வருகிறார்கள் மேற்படி தர்மத்தை ஏற்படுத்தியவர் சிறந்த தர்மகுணத்துடன் ஏற்படுத்தியிருந்தாலும் அது இப்போது தாம் பிறந்த குலத்தையும் அதைச் சார்ந்தவர்களை அடக்கி பிறர் அத்தர்மத்தின் பலனை அனுபவித்து வருகிறார்கள். எல்லா தர்மசொத்துக்களையும் பிராமணர் என்று சொல்லிக்கொள்பவர்களே அனுபவிக்கும்படி ஏற்பாடுகள் செய்து கொண்டுவிட்டார்கள். உதாரணமாக, சீர்காழி ஸ்ரீ சட்டநாதசுவாமி கோவிலுக்கு வருஷம் 1-க்கு 120 வராகனுக்கு அதாவது மாதம் 35-க்கு சாயரட்சை கட்டளை செய்து வரும்படி மேற்படி பச்சையப்ப முதலியாரால் எழுதிவைக்கப்பட்டு மேற்படி கோவில் சிலா சாசனமும் சுமார் 85 வருஷங்களுக்குமுன் அடித்து வைக்கப்பட்டிருக்கிறது. மேற்படி தர்மமானது இரண்டாங்காலத்தில் நடத்தப்பட்டு நிவேதியமான சாதத்தை ஏழைகளுக்கும் பாதேசிகளுக்கும் கொடுப்பது வழக்கம். எனக்குத் தெரிந்து மாலை 8 மணிக்கு இரண்டாங்காலம் ஆனதும் நிவேதியத்தை பிராமணப்பிள்ளை தீர்த்தக் கரைக்குக்கொண்டுவந்து பகிரங்கமாக "அசலூர் தேசாந்திரிகள் போஜனம் வேண்டியவர்கள் வரலாம்" என்று கூப்பிட்டவுடன் சுவாமி தெரிசனார்த்தம் வெளியூர்களிலிருந்து யாத்திரையாக வந்தவர்களில் சாப்பாடு வேண்டியவர்களும் இதர ஏழை பாதேசிகளும் வந்து பெற்றுக்கொள்வது வழக்கம். அதுவும் இப்போது கேட்பாரின்றி பிராமணர்கள் மேற்படி பிரசாதத்தைத் தங்களுக்கு பாத்தியதை கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். இப்போது "அசலூர் தேசாந்திரி பிராமணாள் போஜனம் பண்ணப்பட்டவாள் வரலாம்" என்று சாதம் கொடுக்கும் பிராமணப்பிள்ளை கூப்பிட்டுக்கொண்டே தன்னுடன் தனக்குவேண்டிய சில பிராமணர்களைக் கூட்டிக்கொண்டு வந்து இதர பாதேசிகள் வருமுன் பிராமணர்கள் கையில் கொடுத்துவிடுகிறான். இதைபாராவது கேட்டால் "பாதேசிகளுக்கென்ன, தெருவில் பிச்சை வாங்கித்தின்னட்டுமே, பிராமணாள் எங்கே போவார்கள்" என்று சொல்வதோடு கேட்பவர்களையும் கோபித்துக் கொள்ளுகிறான் இதைப்பற்றி பல தடவைகள் புகார் செய்யப்பட்டு அதை மேல் விசாரணை செய்பவர் கண்டித்துமிருக்கிறார்.

இந்தப்பக்கத்தில பிராமணர்களுக்கு சோற்றுக்குப் பஞ்சமில்லை. சிதம்பரம் முதல் மாயவரம் வரையில் 24 மைல் தூரத்தில் 8 அன்னச்சத்திரங்கள் இருக்கின்றன. சராசரி 3 மைலுக்கு ஓர் சத்திரம் இருக்கிறது. ஒவ்வொரு சத்திரத்திலும் 3 வேளை சாப்பிடலாம். தொடர்ந்தாப்போல் 3 வேளைக்குமேல் சாப்பிடக்கூடாது. விசேஷ தினங்களில் பலகார பக்ஷணங்களும் சனிக்கிழமை எண்ணெய் ஸ்நானமும் உண்டு.

மேற்படி சத்திரங்களில் சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோவில், மாயவரம் சத்திரங்கள் நாட்டுக்கோட்டையார்களாலும், புத்தூர் சத்திரம், மணலி சின்னையா முதலியார் குடும்பத்தாராலும், வடமலைப் பிள்ளை சத்திரம் கடைக்கால்லூர் ஆச்சியாலும், தென்பாதி சத்திரம் திரு நாராயண பிள்ளையாலும், ஆணிக்காரன் சத்திரம் லோகல்போர்டாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த தர்மங்கள் எல்லாம் பிராமணரல்லாத நம்மவர்களாலேயே சொத்துக்கள் விடப்பட்டும் அதை மேல் விசாரணை செய்யும் மணியகாரர் போன்றவர்கள் பிராமணர்களாக இருப்பதாலும் அதை நடத்துபவர்கள் இந்தப்பார்ப்பனர்களுக்கு சோறுபோடுவதுதான் தர்மம் என்று நினைப்பதாலும் ஒரு கூட்டத்தார் சோம்பேரிகளாக சத்திரத்திற்குச் சத்திரம் சாப்பிட்டுவிட்டு நம்மையும் தூஷித்துக்கொண்டு சிறுமைப்படுத்திவருகிறார். ஏழை பாதேசிகள் சென்றால் அவர்களை தூஷிகத்தும் துரத்துவதும் தவிர அண்டாவில் ஒட்டின காந்தல் கருவல் மீதி மிச்சம் உள்ளதை ஒன்றாகப்போட்டு பிசைந்து ஆளுக்கு ஒரு உருண்டை கொடுப்பதும் உண்டு. பசித்தோர்க்கு அன்னமிடுவதுதான் தர்மம். ஒரு சில ஜனங்கள் பசியால்வாடி தெருவில் நின்றுகொண்டு வருந்தவும், ஒரு சிலர் உண்டு கொழுத்து சாதம் செரிக்கவில்லையே என்று, சந்தனத்தைப்பூசிக்கொண்டு திண்ணையில் கிடந்து புரண்டுகொண்டு இருப்பதும் எந்த கடவுளுக்கு சம்மதமாகும்! பார்ப்பனர்களுக்கு சோறுபோடுவதை நாம் வேண்டாமென்று சொல்லவில்லை. வெறும் தடிப்பயல்களாய் சத்திரத்தில் சாப்பிடுவதையே தொழிலாகக்கொண்ட சோம்பேரிகள் தாங்கள் உயர்ந்தவர்கள் என்றும் தங்களுக்கு அன்னமிடுவதுதான் புண்ணியமென்றும் சொல்லி சத்திரத்திற்குச் சத்திரம் சாப்பிட்டுக்கொண்டு நம்மையும் இவன்கெட்டான் இவன் சூத்திரன், இவன் லோபி, இன்றையதினம் சாப்பாடு சுகமில்லை, பிராமணருக்கு ஒருவேஷ்டியெடுத்துக் கொடுத்தால் என்ன? என்று குறைசொல்லிக்கொண்டு திரிபவர்களுக்கு அன்னமிடுவதால் என்ன புண்ணியம்? பசியால்வாடும் சகல ஜீவனையும் ஒன்றெனமதித்து உதவுவதுதான் உத்தம தர்மமாகும். நிற்க, மேற்படி பச்சையப்ப முதலியார் கட்டளையில் சுமார் 12 பேர் சாப்பிடக்கூடிய பிரசாதம் சிலவழிக்கப்பட்டும் பெரும்பாலும் பார்ப்பனர்களுக்கு அவர்கள் சூழ்ச்சிகளாலும் அபிமானத்தாலும் போய்விடுவதால் ஏழை பாதேசி யாத்திரைவாசி முதலியவர்களுக்கு கிடைப்பது கஷ்டமாகவிருக்கிறது. இதன் விசாரணைக்கர்த்தர்கள் சரியான காலத்தில் அங்கு வந்து உண்மையாக யாத்திரைவாசிகளாக வந்தவர்களுக்குக் கொடுப்பதுதான் தர்மமாகும். உள்ளூரில் உள்ள சிலகோவில் பூனைகளும் சமயம் கிடைத்தால் அடித்துக் கொண்டு போய்விடுகின்றன.

ஆகையால் மேற்படி தர்மத்தின் பலனை யாவரும் வித்தியாசமன்னியில் அனுபவிக்கும்படி செய்யவேண்டியதுடன் பிராமணர்கள் தங்களுக்கு உரிமைபோல் பாத்தியங்கொண்டாடி கூப்பாடுபோடுவதையும் தடுத்து வழக்கப்படி, அசலூர் தேசாந்திரிப்பிரயாணிகள் என்றே கூப்பிடவும் செய்யவேண்டும் இது விஷயத்தை மேற்படி தர்மஸ்தாபன விசாரணை கர்த்தர்கள் விசாரித்துத் தக்கது செய்வார்களாக.

C. S. சாமிநாத செட்டியார்,
சீர்காழி.

---

மதுரைக் கோவில் பார்ப்பனர் அக்கிரமம்:— 7-2-27 தேதி திங்கட்கிழமை ஸ்ரீ மீனாட்சி கோவிலுக்குச் சென்றிருந்தேன். அங்கு சில பார்ப்பனரல்லாதார் தாங்களே தேங்காய் உடைத்தார்கள். எல்லா பட்டர்களும் ஒன்றுசேர்ந்து டிரஸ்டியிடம் தெரிவித்தும் நம்மவரைக் காலால் உதைத்தும் அடித்தும் தேங்காயுடைப்பதைத் தடுத்தார்கள். தடுத்தும் நாற்றுக்கணக்கான தேங்காய்கள் உடைபட்டுக்கொண்டேயிருந்தன, பின்னர் பட்டர்களும் டிரஸ்டியும் போலீசாருக்குத் தாக்கல் கொடுத்தார்கள். அதற்குள் அவரவர் காரியம் முடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். அங்கிருந்த ஸ்ரீமான் நாராயணசாமி நாயுடு தான் தூண்டினாரென்று போலீசாரிடம் பட்டர்கள் கூறினார்கள். போலீசார் உண்மை விசாரித்து அவர் இதில் சம்பந்தப்படவில்லை என்று விட்டுவிட்டார்கள் என்று மதுரை ஸ்ரீமான் ஏ. என். வெங்கடசாமி நாயுடு அறிவிக்கிறார்.

---

### திருத்தம்.

6-2-27-ம் தேதி வெளியான "குடி அரசு" 41-வது மலரில் 12-ம் பக்கம் திருவண்ணாமலை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்திறப்பு விழா பொங்கல் உண்டி வசூல் விபரத்தில் தவறுதலாய் விட்டுப்போன பெயர்கள் திருவண்ணாமலை ஸ்ரீமான் சு. சு. வ. சாமிநாத செட்டியார் ரூ. 10. ஸ்ரீமான் என். முத்து செட்டியார் ரூ. 5.

---

(9ம் பக்கத்தொடர்ச்சி)

வந்து கொடுத்தால் வீட்டிலுள்ள தண்ணீரெல்லாம் தோஷப்பட்டுவிட்டது என்று கட்டுப்பாடு சொல்லுகிறது. விஷயம் பெரியதானதால் விரிந்துவிடும். சுருங்கக்கூறுமிடத்து சமயம் விடுதலையைப் போதிக்கிறது. குருக்களின் கட்டுப்பாடு பாவத்தை உண்டுபண்ணி மக்களை அடிமைப்படுத்தி ஆநந்தப்படுகிறது—மதத்தின் பெயரால்பிழைப்பிற்காக ஏற்படுத்திக்கொண்ட சிலகிரியைகளுக்கும் பாவனைகளுக்கும்சிறிது பணம் செலவு செய்துவிட்டு தனக்கெல்லாம்வந்துவிட்டது தான் செய்யவேண்டியதெல்லாம் செய்து முடிந்து விட்டது என்று நினைப்பவர்கள் தங்களிடம் கணக்கு கேட்கும் காலம் வரும்போது நஷ்டக்கணக்குத்தான் காட்டமுடியுமென்பதை உணரவேண்டும்.

# செய்தித்திரட்டு.

**திருக்கோவிலூர் ஜீயர் மடம்:—** ஜாதிபேதம் பாராட்டாது எல்லா வகுப்பார்களும் உஜ்ஜீவனம் அடைவதற்காதாரமாயிருந்த இவ்வூர் ஜீயர்மடம் இப்போது முறைகெட்டுப் பார்ப்பன ஆதிக்கத்திலிருக்கின்றது. சந்நியாச ஆஸ்ரமத்தாரே அதிபதிகளாயிருந்த காலம்போய் இப்போது இல்லறத்தாரே தலைவர்களாகி வார்சு பாத்தியங்கொண்டாடி வருவதோடு அவர்களுடைய சுற்றத்தாருக்கும் இனத்தாருக்குமே அதிகப்பலன் தரத்தக்க நிலையிலிருக்கிறது. கலியாணஞ்செய்து கொண்டு ஜீயராயிருக்கும் நிலைமை இம்மடத்தில் இரண்டு மூன்று தலைமுறைகளாகத்தானிருக்கிறது. இப்போதுள்ளவர் ஆசாரியஸ்தானத்திற்குவேண்டிய சம்பிரதாயக் கல்வியோடு மற்றைப்படிப்பும் குறைந்தவர். பந்துக்களுக்கும் ஜாதியாருக்குமே சர்வசுதந்தரம் அளிக்கிறார். மற்றையோரை பெருமாளைச் சேவிக்கும் விஷயத்தில் கூட அதிகநிர்ப்பந்தப்படுத்திகிட்ட வரவொட்டாமலிம்சிக்கின்றார். புண்ணியம், மோட்சம் என்ற பேரால் நமது ஜனங்களை ஏமாற்றி பணம் மாத்திரம் ஏராளமாய்ப் பிடுங்குகிறார். தன்னை ஊர்வலம் செய்யச்சொல்லுகிறார், காலில் விழச்சொல்லுகிறார் இது என்ன அநியாயம்! ஆதலால் இப்பேர்ப்பட்டவர்களை ஆசாரியாராக வரிக்காமல் அந்தந்த ஜாதியிலேயே ஆசாரியர்களை ஏற்படுத்திக் கொள்ளல் மிக மிக விசேஷமானதாகும். தேவஸ்தான சட்டத்தை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்று ஸ்ரீ பெரும்புதூர் அழகிய மணவாள கொங்கில்ஸ்வாமிகள் அறிவிக்கின்றார்.

* * *

**கோ. லெட்சுமிபுரம் ஸ்ரீ மீனாட்சி சங்கத் ஆண்டுநிறைவு விழா:—** ஷை சங்கத்தின் முதலாண்டு நிறைவுவிழா அட்சய ஆண்டு மாசித் திங்கள் நான்காம் நாள் "குமரன்" பத்திராதிபர் திருவாளர் சொ. முருகப்பசெட்டியாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும் என்று ஸ்ரீ மீனாட்சி சங்கத்தாரறிவிக்கிறார்.

* * *

மன்னார்குடி தியாகராஜ வாசகசாலைத் திறப்பு விழா:— 6-2-27௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வேதாரண்யம் புராணிகர் ஸ்ரீலஸ்ரீ தியாகராஜ தேசிகரவர்கள் தலைமையின் கீழ் ஷை வாசகசாலைத் திறப்புவிழாக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றதாக திருநாகை அமுதனார் அறிவிக்கிறார்.

* * *

மதுரை முனிசிபாலிடி மீண்டும் மந்திரிக்கு வரவேற்பு:— மதுரை முனிசிபல் கவுன்சில் கூட்டமொன்று 10-2-27௳ சேர்மன் ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. 15 கவுன்சிலர்கள் ஆஜராயிருந்தார்கள். சுயராஜ்யக்கட்சி அங்கத்தினர் ஸ்ரீமான் எல். கே. துளசிராம், எம். எல். சி. மட்டும் வந்திருந்தார். அவ்வமயம் முதன் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் மதுரைக்கு வரும்பொழுது முனிசிபாலிடியார் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கும் விஷயம் ஆலோசனைக்கு வந்தது. ஸ்ரீமான் துளசிராம் அவர்கள் நீங்கலாக மற்றைய எல்லோரும் இதை ஆதரித்தார்கள் என்றும், செலவுக்காக ரூபாய் 500. சாங்ஷன் செய்யப்பட்டதென்றும், ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

* * *

**பிராமணீயமொழிந்த திருமணங்கள்.—** தென்காசி வடக்கு ரதவீதி ஸ்ரீமான் கா. அ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமையனார் குமாரர்கள் இருவருக்கும் சென்ற 6, 7-௳ தேதிகளில் நடந்த கல்யாணங்களில் வேளாள வகுப்பைச் சேர்ந்த புரோகிதர்களைக்கொண்டே சகல மணச்சடங்குகளும் சிறப்பாக நடத்தப்பட்டனவென்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

* * *

வேலூர்:— 1927-ஞு பிப்ரவரி-மீ 4-௳ வேலூர் வக்கீல் ஸ்ரீமான் வி. எஸ். பத்மநாப முதலியார் அவர்களால் பிராமணரல்லாதார் சிற்றுண்டிசாலையை கோஷா ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலுள்ள கட்டடத்தில் திறக்கப்பட்டிருக்கிறது. அச்சமயம் ஸ்ரீமான்கள் டி. பத்மநாப நாயுடுகாரு பி. ஏ., பி. எல் வக்கீல், வேலூர் கே. பி. சந்தோஷ், இங்கிலீஷ் உதவி போதகாசிரியர், கிருஷ்ண ரெட்டியார் பி.ஏ.,பி.எல், ஐ. கணபதி பிள்ளை, ஆதிதிராவிடர் முதலிய பல கனவான்கள் வந்திருந்தனர், அச்சமயம் ஸ்ரீமான் வி. எஸ். பத்மநாப முதலியார் அவர்கள் பிராமணரல்லாதார் சிற்றுண்டிசாலையை முக்கியமாய் மதுரை தீர்மானத்தை ஒட்டி நமது திராவிட மக்கள் சுயமரியாதையை அனுசரிப்பதற்கே ஏற்பட்டதென்றும் இன்னும் பலவாறு ஏற்படக்கூடிய நன்மைகளை வெகுவிரிவாய்ச் சொல்லிமுடித்தார். கடைசியில் அச்சமயம் வந்திருந்த கனவான்களுக்கு சிற்றுண்டிகளும், ரோஜா புஷ்பங்களும், வெற்றிலை பாக்கு முதலியவைகளும் வழங்கப்பட்டன. இத்தகைய சிற்றுண்டிசாலைகளை நகரங்கள்தோறும், கிராமங்கள்தோறும் ஏற்பாடுசெய்தல் மிக்க பயன் தரத்தக்கது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர்களும் ஒரு பிராமணமாணவரும் வந்து உணவருந்தியமை குறிப்பிடத்தக்கது என்று ஸ்ரீமான் வேணுகோபால நாயுடு அறிவிக்கிறார்.

* * *

சுகாதார வாரக்கொண்டாட்டம்:— திருவண்ணாமலை, வேலூர், சிவபுரம், வாலாஜாபாத், கிஞர், முதுகுளத்தூர் சைதாப்பேட்டை தாலூகா அயனம்பாக்கம் போர்டு ஆண் பாடசாலை முதலிய விடங்களில் சுகாதாரவிழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டதென அந்தந்த ஊர் நிருபர்கள் அறிவிக்கிறார்கள்.

* * *

அருப்புக்கோட்டையில் ஒரு வரவேற்பு:— ஒரு வாசகசாலைப் புதுக்கட்டடத் திறப்புவிழாவின் காரணமாக திருச்சுழியல் செல்ல வந்த ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். சி. அவர்களை முன்னரே ஏற்பாடு செய்திருந்தபடி இவ்வூர் ஸ்ரீரங்கவிலாச பாடசாலைமாணவர்களின் வரவேற்புப்பாட்டு முழக்கத்தோடு வரவேற்று அவருக்கு ஒரு உபசாரப் பத்திரமும் வாசித்துக்கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் நாடாரவர்களோடு ஆறுமுக நாடாரவர்களும் (நாடார் மஹாஜனசங்கக் காரியதரிசி) விஜயம் செய்திருந்தார்கள் என்று ஸ்ரீமான் சி. வ. கு. சுப்பிரமணியன் அறிவிக்கிறார்.

* * *

## பிராமணியத்தை ஒழித்தல்.

கோட்டாறு டாக்டர். எம். இ. நாயுடு அவர்களின் மாமியார் (மனைவியின் தாய்) இறந்தபின் ஈமத்தன்று அது சம்பந்தமான கிரியைகளுக்கு பிராமணரை வருத்தவேயில்லை. அக்கிரியைகளை ஒருவரைக் கொண்டும் ஒழுங்காக நடத்தவில்லை. பொதுவே பந்துக்கள் யாவருங்கூடி இறந்த முதியவருக்கு நற்கதியருள இறைவனை இறைஞ்சினர். பிராமணர்கள் கூறும் ஏனைய கருமங்களெல்லாம் தங்கள் பிழைப்பிற்காக அவர்களே ஏற்படுத்தியன போலும். எவ்வாற்றினும் நாட்டில் பிராமணியமென்ற பித்து தொலைந்து வருவது மிக நன்மையே என்று உண்மை அறிந்து அறிவிக்கிறார்.

நாகப்பட்டணம் தொழிலாளர் சங்கத்தலைவராகிய ஸ்ரீமான் டி. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களுக்கு திருப்பூர் வாசிகளாகிய இயந்திரம் இயக்கும் தொழிலாளர் சகோதரர்கள் அளித்த நல்வரவுபத்திரம்.

அன்பும் அருளும் அமைந்த ஐயா!

நாங்கள் நடாத்திவருகின்ற தொழில் உலகத்திற்கு இன்றியமையாததும் ஏற்ற முடையதுமான சிறந்ததொழில் என்று செப்ப யாரும் பின்னிடார். அத்தகைய தொழில் தற்காலம் சீர்குலைந்திருக்கிறது. அதைமேற்கொண்டுள்ள யாங்கள் வறுமையின் பாற்பட்டு வாடுகின்றோம். "விசும்பிற்றுளிவீழினல்லான்மற்றாங்கே, பசும்புற்றலை காண்பதரிது" என்ற ஆன்றோர்வாக்கின்படி வாடிய பயிர் செழிக்கவரும் மழைபோல வந்துள்ள தங்கள் முன்னிலையில் எங்கள் குறைகளைச்சிறிது தெரிவிக்கின்றோம் அதற்குச் செவி சாய்க்குமாறு வேண்டுகின்றோம்.

இத்தொழில் இவ்வளவு சீர்கேடானதற்கும், எங்களை நடாத்திவரும் தலைவர்கள் எங்களைப் புறக்கணிப்பதற்கும், எங்கள் ஒற்றுமைக்குறைவே பெருங்காரணமாக இருக்கிறது, எங்ஙனமெனில் எங்களிற்பலர் ஒருவர் தொழிலிலிருக்கும்பொழுது மற்றொருவர் குறைந்த ஊழியத்துக்கு வருவதாகச்செல்வதே, அத்தலைவர்கள் தொழில்நடைபெறுங்காலங்களில் எங்களை விரும்பியழைப்பதற்கும், ஓய்வுகாலங்களில் ஒதுக்குவதற்கும் காரணமாகின்றது எங்களிடத்தில் ஒற்றுமை நிரம்பியிருக்குமாயின் குறைந்த சம்பளத்திற்கு செல்லுதலும் வேலையில்லாதகாலங்களில் வருந்துதலும் ஏற்படமாட்டாது, நாலுமாதம் உணவுகொண்டு சில மாதங்கள் உணவில்லாமல் இருப்பதென்றால் இஃது எப்படிமுடியும்? இத்தகைய முறை பாட்டினைக்களைவது ஒற்றுமையென்னும்வாளாலன்றி மற்றொன்றால் வெற்றிபெறலாகுமா?

இத்தொழிலேற்றமுடையதென்பதற்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் பார்த்தசாரதியாகயிருந்துரதத்தை நடாத்தியதே போதியசான்றாகும். ரதம் என்பதற்கு வடமொழியில் மனித சரீரம் என்றும், வாகனம் என்றும் உரைக்கலாம்.எப்படி ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அருச்சுனனைக்கருவியாகவைத்துக் கொண்டு உலகத்திற்கு நன்மை செய்தனரோ, அவ்வாறே எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அப்பகவான் திருநாமத்தைப்பெற்றுவந்த தாங்கள் எங்கள் குறைகளாகிய சொற்களைக்கருவியாகச் செவியிலேற்று எங்களுக்குள் ஒற்றுமையேற்படுத்தி நாங்கள் முன்னேற்றம் அடைவதற்குண்டான மார்க்கத்தை கற்பிக்கவேண்டுகின்றோம். எங்கள்வேண்டுகோளுக்கிணங்கித் தேக சிரமத்தையும் பொருட்செலவையும் எண்ணாமல் இங்கு விஜயம் செய்த தங்களுக்குத்தீர்க்காயுளையும், திடசரீரத்தையும் அருள்புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இங்ஙனம்,

வேண்டிக்கொள்ளும் தொழிலாளர்கள்
ஆர். என். ராஜு நாயுடு நாராயணசாமி நாயுடு
ராமய்ய ஆசாரி


## ஜீவாநந்த கைத்தொழில் போதினி.

என்ற புத்தகத்தை பார்த்தீர்களா? இல்லையானால் இன்றைக்கே 0-8-0 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். இதில் பன்னீர், ஸோப், ஊதுவத்தி, வாசனைசோப், பரிமளரோஸ் பற்பொடி, அஞ்சனம் இவ்விதமான அபூர்வ 8 முறைகளடங்கியிருக்கின்றன கொஞ்சம் பிரதிகளே அச்சிட்டிருப்பதால் உடனே முந்துங்கள்.

விலாசம்:— S. V. இராமதாஸ் நாயுடு,
கைத்தொழில் புரொபஸர்,
செம்பொன்னார் கோவில். (S. I. R.)

## முக்கிய அறிவிப்பு.

சந்தா நேயர்கள் தங்களது சந்தாத் தொகையை அனுப்பும்போதும், கடிதம் எழுதும்போதும் சந்தா நெம்பரைக் குறிக்கவேண்டும். அப்படிக் குறித்து அனுப்பாத கடிதங்கள் உடனே கவனிக்கப்படமாட்டா.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.


## க்ஷய சம்மாரி.

இது ஒரு மஹானால் எமக்கு அளிக்கப்பட்டது. 20-வருஷங்களாய் பரிக்ஷிக்கப்பெற்றது, க்ஷயம், சுவாசகாசம், இருமல், இளைப்பு இவைகளை அறவே போக்கடிக்க ஓர் கற்பம் போன்றது. ஒருவாரம் மருந்தில் குணம் தெரியும் பத்தியமில்லை.

1-வாரம் மருந்து விலை ரூ. 1—4—0 15-நாள் மருந்து விலை ரூ. 2—0—0

## மேகராஜாங்க மதனவிந்தாதி லேகியம்.

மேகசம்மந்தமான கொடிய வியாதிகளையும், வீரிய நஷ்டம், சொர்ப்பனஸ்கலிதம், ஞாபகக்குறைவு. அசதி, சோம்பல், கைகால் நடுக்கம், வாந்தி, அஜீரணம் முதலியதுகளை நீக்கி, நல்ல பசியும், ஜீர்ணசக்தியை கொடுத்து தளர்ந்துபோன நரம்புகளை பலப்படுத்தி தாதுபுஷ்டியும் ஆண்மையும் முகதேஜசும் உண்டாக்கும் பத்தியமில்லை.

1-சேர் லேகியம் ரூ. 5—0—0 அரை சேர் லேகியம் ரூ. 2—8—0

## சர்வமேக பரிமளாதிஸ்நானத்தைலம்.

இத்தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர கண் எரிச்சல், மண்டை குத்து, ஒற்றைத் தலைவலி, மயிர் உதிர்தல் பொடுகு தேகக் கொதிப்பு, மயக்கம், அஸ்தி ஜுரம், நீர் எரிச்சல், வெட்டை, கைகால் எரிவு முதலிய சர்வமேக ரோகத்தையும் நீக்கி ரத்த விர்த்தியை கொடுக்கும். பத்தியமில்லை.

24-அவுன்ஸ் தைலம் விலை ரூ. 5—0—0 12-அவுன்ஸ் ரூ. 2—8—0

ஷண்முகாநந்தர் வைத்தியசாலை,
14–106 பெரிய கடை வீதி,
கோயமுத்தூர்.



## மதன கோலாகல ரசமணி மாத்திரை.

மறதி, அசக்தி, சோம்பல் முதலிய கெடுதல்களைப் போக்கி தாது புஷ்டியை உண்டாக்குவதிலும், பசியை உண்டாக்குவதிலும் அபார சக்தி வாய்ந்தது. ஒரு மாத்திரையில் பரீட்சிக்கலாம். மாத்திரை 50-க்கு ரூ. 3—12—0. 25-க்கு ரூ. 2—0—0. வி. பி. வேறு.

மானேஜர்:—ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு. (S. I.)



## சுத்த கத்தர் பனியன் வாங்குங்கள்.

கைராட்டின நூலினாலேயே தயார் செய்யப்பட்டது.

விலை நயமானது. சரக்கு மேலானது.

**Trade**



**Mark.**

Registered.

உங்களுக்கு வேண்டிய சுத்த கத்தர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதாவென்று கவனித்து வாங்கவும். மொத்தமாய் வாங்கினால் நல்ல கமிஷன் கிடைக்கும் விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

மானேஜர்:—

*M. V. K Khaddar Banian Works, Tirupur (S India)*



## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)



## ரூபாய் 500 இனாம்!

## நல்லெண்ணை.

சுத்தமான எள்ளு எண்ணைக்கு
உத்திரவாதம் செய்கிறோம்

மணிலாக்கொட்டை கடலை எண்ணை கலப்படமில்லாத சுத்தமான நல்லெண்ணை கிடைப்பதோ மிகவும் துர்லபம்.

இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காகவே தனியாக செக்கு ஏற்படுத்தி நமது நேர் கண்பார்வையில் திடமான எள்ளாக வாங்கி சுத்தம்செய்து நல்ல வெல்லம் கலக்கி தனியாக ஆட்டி விற்கிறோம். இதில் ஏதாவது கலப்படம் இருக்கிறதாக ருஜு செய்கிறவர்களுக்கு 500 ரூபாய் இனாம்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

வி. ரங்கசாமி செட்டியார்,
கச்சேரி வீதி, "குடி அரசு" ஆபீசுக்கு
அடுத்த கட்டடம், ஈரோடு.



## டிடக்டாஸ் அல்லது
## துப்பறியும் (ரகசியம்) கருவி.



இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனால் ஏக காலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்துகொள்ளலாம். மேனாட்டார் கண்டுபிடித்த கருவி இது. பல கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

"மலாய் நாட்டிலுள்ளவர்களுக்கு கண்டிப்பாய் வி. பி. மூலம் அனுப்பமுடியாது. முன்பணமாவது போஸ்டல் ஆர்டராவது அவர்கள் அனுப்பவேண்டும்".

பாரீஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

நமக்கேற்ற நவீனக நாவல் — நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அவரவாதிர்ஷ்டவசம் அறியலா மிதுநிஜம் — ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்.

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

# இரங்கூன் இரகசியம்.

ஓர் இனிய செந்தமிழ் நாவல்

செந்தமிழ்ச் சகோதரர்காள் எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழேவைக்கமன மிராது. நாகரீகம், நவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்கிரதமமை ந்தது அறிவை விளக்கி அகமகிழச்செய்வது. மோசம் நாசமகம்பளிவேஷம்போடும் வயிற்றுப்பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக் காட்டுவது. அந்நிய தேச ஜீவனம்ச கஷ்ட நஷ்டத்தின் பலனை போதிப்பது. சதிபதிகளின் சமுசார வாழ்க் கைத்துணை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்திபுகட்டுவது மனதின் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப்பரதேசிகள், வழி பதிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச்செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோ லெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம் அழகிய பிரின்ட், அருமையான ராப்பர் பயிண்டு. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0. வி. பி. தபால் செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி நெ. 1051, 63, 39-வது கல்லி, இரங்கூன்.



பாரம்பரியமாகக் கையாண்டு வருவது — கைகண்ட அனுபவமுள்ளது
ஒரே முறை பரீட்சியுங்கள் — உண்மை கண்டு மகிழுங்கள்

# அகத்தியர் மகா சந்தனாதித் தைலம்.

இதுவரை எவ்வளவோ தைலங்கள் இப்பெயரால் வெளிவந்திருப்பினும் அவைகளுக் கெல்லாம் சிரோரத்னமாக விளங்குவது இந்தத் தைலமே. இதை ஒருமுறை உபயோ கித்தவர்கள் ஒருநாளும் கைவிடமாட்டார்கள் என்பது திண்ணம். பிரமேயம், கைகா லெரிவு, கண்ணெரிவு, புகைச்சல், சொரிசிரங்கு, புழுவெட்டு, ரணகிரந்தி, க்ஷயம், பித்த மயக்கம், அஸ்திசுரம், வெட்டை, முதலியவைகளை ஆச்சரியகரமாய்ச் சுகப்படுத்துவதில் நிகரற்றது. 24 அவுன்ஸ் உள்ள பாட்டில் 3—8—0, 12 அவுன்ஸ் 2—0—0

# திரிலோக செந்தூரமும் மகா வில்வாதி இலேகியமும்.

கைகால் எரிவு, சுரம் 64, பித்தம் 40, சகல வாய்வுகள், அதிசாரம், அன்ன துவேஷம், வெள்ளோக்காலம், க்ஷயம், சூலை முதலியன தீரும். 48 நாள் டி. லேகியத்தில் வைத்துச் சாப்பிடக்கூடிய செந்தூரமும் லேகியமும் விலை 3—0—0,

# போஜன சஞ்சீவி தாதுவிர்த்தி இலேகியம்.

இதைச் சாப்பிடுவதால் அசுத்த ரத்தம் சுத்தியாகி விர்த்தித்து வித்து கட்டும். சகல வாய்வு ரோகங்களும் தீரும். மூலக்கிராணி, வயிற்றுப்போக்கு, இருமல், க்ஷயம் முதலியன தீர்ந்து வச்சிர தேகம் ஆகும். எல்லா மருந்துகளுக்கும் இச்சா பத்தியம். தபால் கூலி வேறு. இன்னும் அநேக மருந்துகளடங்கிய கேட்லாக் ஒரு அரை ஸ்டாம்பு அனுப்புவோர் களுக்கு அனுப்பப்படும். சேர் 1-க்கு விலை 2—0—0, அரை சேர் 1—4—0.

உபயோகமுறை மருந்துடன் அனுப்பப்படும்.

பண்டிதர் க. பிச்சைமுத்து, நேட்டிவ் டாக்டர்,
பிரமமுனி சித்த வைத்தியசாலை,
கீழப்பாலக்கரை, திருச்சினாப்பள்ளி.

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.



நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்.

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.



# மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.



ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

# மூட்டப்பூச்சி எமன்.

இதில் ஒரு சொட்டு பஞ்சில் எடுத்து எந்தச் சந்துகளில் ஆயிரக்கணக்காய் மூட்டைப் பூச்சிகளிருக்கின்றனவோ அந்த விடங்களில் தடவினால் அந்த க்ஷணமே அடியோடு அவ்வளவும் அழிவது நிச்சயம், சுண்ணாம்புடன் கொஞ்சம் கலந்து சுவற்றில் பூசிவிட்டால் அந்த வம்சமே அழிந்துவிடும். 2 அவுன்ஸ் புட்டி 1-க்கு 0—15—0

# பாக்கெட் டாக்டர்.

இது எல்லாவித நோய்களுக்கும் பெரிய சஞ்சீவி. துளி கணக்காய் சாப்பிட்டு அநேக குழந்தைகள் முதல் விருத்தாப்பியர்வரை சுகமடைந்திருக்கிறார்கள், ஒருதடவைவாங்கி பரீக்ஷியுங்கள்:

புட்டி 1-க்கு ரூ. 1—8—0

# புகையிலை துண்டுகள்

காங்கய நாட்டிலிருந்து லக்ஷக்கணக்காய் பாலக்காடு முதலிய இடங்களுக்கு போகிறது, இது இங்குதான் உற்பத்தி. தினம் 100 துண்டுகள் 100 தடவை போடக்கூடியது ரூ. 0-10-0.

K. V. வேணுமயிலு முதலியார்,
மயிலர் திருமாளிகை, காங்கயம்.



இனாம் — இனாம்!!

# ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 292, மதராஸ்


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.